15.12.15

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு



சென்னை: 'காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அடுத்த நான்கு நாட்களுக்கு, லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.இதுகுறித்து வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:குமரி கடல் மற்றும் இலங்கை அருகே கடல் மட்டத்தில் இருந்து, 1.5 கி.மீ., உயரத்தில், காற்று மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டு உள்ளதால் இன்று முதல், 18ம் தேதி வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில், ஒருசில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது; கனமழைக்கு வாய்ப்பு இல்லை.சென்னையில் அடுத்த 48 மணி நேரத்துக்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். வெயில் அதிகபட்சமாக 31 டிகிரி செல்சியஸ்; குறைந்தபட்சமாக 24 டிகிரி செல்சியஸ் என, இருக்கும். நேற்று காலை 8:30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக, கோவை மாட்டம் வால்பாறை - 3; ஈரோடு

மாவட்டம், தாளவாடி, நீலகிரி மாவட்டம் தேவலா - 1 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## செம்பரம்பாக்கம் ஏரிக்கு 608 கனஅடி நீர் திறப்பு

திருவள்ளூர்:பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, செம்பரம்பாக்கம் ஏரிக்கு, 608 கனஅடி நீர் திறக்கப்பட்டு உள்ளது.பூண்டி நீர்த்தேக்கம் தொடர் மழையால், நிரம்பி கடல் போல் காட்சியளிக்கிறது. தற்போது, நீர்த்தேக்கத்திற்கு, வினாடிக்கு, 896 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மொத்த கொள்ளளவான, 3,231 மில்லியன் கனஅடியில், நேற்று மாலை, 6:00 மணி நிலவரப்படி, 2,989 மில்லியன் கனஅடி தண்ணீர் நிரம்பி உள்ளது. பூண்டி நீர்த்தேக்கத்தில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர், புழல், சோழவரம் ஏரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, சென்னை நகரின் குடிநீர் தேவைக்காக வினியோகிக்கப்படுகிறது.தற்போது, மேற்கண்ட இரு ஏரிகளும் நிரம்பி வழிகிறது. இதையடுத்து, பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, பிரதான கால்வாய் மூலம், செம்பரம்பாக்கம் ஏரிக்கு, வினாடிக்கு, 608 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. மேலும், பேபி கால்வாய் மூலம், 10 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

## மண்ணிலுள்ள புதிர்கள் வெளிவர 'நானோ' ஆய்வுகள் அவசியம்

காந்திகிராமம்,: மண் அடுக்குகளிலுள்ள புதிர்களை வெளிக்கொணர 'நானோ' தொழில்நுட்ப ஆய்வுகள் அவசியம், என காந்திகிராம பல்கலையில்நடந்த சர்வதேச கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.காந்திகிராம பல்கலையின் வேதியியல் துறையின் சார்பில், வேதி அறிவியல், தொழில்நுட்பக் கருவிகளின் தற்கால வளர்ச்சி நிலைகள்' என்னும் தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு நடந்தது. பல்கலை துணைவேந்தர் நடராஜன் தலைமை வகித்தார். இதில் திருவனந்தபுரம் இந்திய அறிவியல் கல்வி, ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ராமகிருஷ்ணன் பேசியதாவது: ஜெர்மன் அறிவியல் மேதை மேசிங்ப்ளான்ங் இதேநாளில் (டிச.,14, 1900) 'குவாண்டம்' கோட்பாட்டை உலகிற்கு அறிமுகம் செய்தார். அன்றிலிருந்து வேதியியலில் ஆராய்ச்சிகள் வேகமாக நடக்கின்றன.இரும்பு, வெண்கலம், செம்பு, பைபர் ஆக்டிக் போன்றவை அணு படிமங்களை மிக நுட்பமாக உருவாக்கும் அளவிற்கு

வளர்ச்சி பெற்றுள்ளன. மண் அடுக்குகளில் நிறைய அதிசயங்களும் புதிர்களும் நிறைந்துள்ளன. அவற்றை வெளிக்கொணர 'நானோ' தொழில்நுட்ப ஆய்வுகளை மேற் கொள்வது அவசியம். அறிவியல் சோதனைகளில் ஏற்படும் தோல்விகளை கண்டு நாம், ஆராய்ச்சிகளில் பின்தங்கிவிடக்கூடாது. அதன்மூலம் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். சவால்களை சாதகமாக்கி புதுமைகளை கண்டறிய வேண்டும், என்றார்.கருத்தரங்க கட்டுரை தொகுப்பை பேராசிரியர் சுந்தரவடிவேல் வெளியிட்டார். பேராசிரியர்கள் சேதுராமன், ஆப்ரஹாம்ஜான், இளங்கோ பங்கேற்றனர். ஜப்பான், மலேசியா, சவுதிஅரேபிய பல்கலைகளின் பேராசிரியர்கள் கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

**விளாத்திகுளத்தில் 2,500 ஏக்கர் பயிர்கள் சேதம் ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் நஷ்டம்**



தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை காரணமாக, விளாத்திகுளம் பகுதியில் 2,500 ஏக்கரில் பயிரிடப்பட்ட உளுந்து, பாசி, மக்காச்சோள பயிர்கள் அழுகின. ஏக்கருக்கு 40 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.விளாத்திகுளம் பேரிலோவன்பட்டி பகுதியில் மானாவாரி பயிர்களான பாசிபயறு, உளுந்து, மக்காச்சோளம் ஆகிய பயிர்கள் 2,500 ஏக்கர் பயிரிடப்பட்டிருந்தன. இந்த பயிர்களுக்கு மிதமான ஈரம் இருந்தால் போதும். தொடர் மழை காரணமாக பயிர்கள்தண்ணீரில் மூழ்கின. இதனால் காய் பிடிக்காமல் உற்பத்தி திறனை இழந்து விட்டன. குறிப்பாக ஒரு பாசிப்பயிறு செடியில் 100 க்கும் மேற்பட்ட காய்கள் காய்க்க வேண்டும்.

ஆனால் பத்து காய்கள் கூட காய்க்கவில்லை. காய்த்த காய்களும் திரட்சியில்லாமல் உள்ளன. வெள்ள நிவாரணம் முழுமையாக வழங்க வேண்டும், என வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட விவசாயிகள் கையில் காய்ந்த பயிர்களுடன், கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். பாதிப்புக்கு நிவாரணம் வழங்க கோரி, கலெக்டர் ரவிக்குமாரிடம் மனு கொடுத்தனர்.பேரிலோவன்பட்டி, விவசாயி காளிராஜன் கூறியதாவது: மானாவாரி பயிர்களை முன் கூட்டியே பயிரிட்டோம். அறுவடைக்கு தயாரான நிலையில், கனமழை காரணமாக பயிர்கள் அழுகிவிட்டன. வெள்ள நீரிலும் பயிர்கள் அடித்து செல்லப்பட்டன. இந்த வகையில் 300 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளோம். ஒரு ஏக்கருக்கு 35 முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். கடன் பெற்று விவசாயம் செய்துள்ளோம். அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என, தெரிவித்தார்.

## கம்ப கால்வாய் மூலம் 22,235 ஏக்கர் நிலங்களுக்குவிமோசனம்:17 ஆண்டுகளுக்கு பின் நெல் பயிரிடும் விவசாயிகள்

காஞ்சிபுரம்;காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதுார் தாலுகாக்களில், 17 ஆண்டுகளாக, வறண்டு கிடந்த கம்ப கால்வாயில், ஒரு மாதமாக தண்ணீர் செல்வதால், விவசாய கிணறுகளில் நீர் சுரந்து, நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இதனால், பயறு வகைகளை விதைத்து வந்த விவசாயிகளுக்கு, நெல்லை பயிரிடும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.இந்த ஆண்டு பெய்த வடகிழக்கு பருவமழை, தமிழகத்தின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய வட மாவட்டங்களை நீரில் மூழ்கடித்தது. இதனால், ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையை புரட்டி போட்டது.

இது ஒரு புறம் இருக்க, 10 ஆண்டுகளாக வறண்டு கிடந்த பாலாற்றில், வெள்ளம் பாய்ந்தோடுகிறது. தண்ணீர் தட்டுப்பாடுபாலாற்றில் தடுப்பணைகளும், அணைக்கட்டுகளும் கட்ட வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை, நிறைவேறா விட்டாலும், பாலாற்றில் ஓடும் வெள்ளத்தால், மாவட்டத்தில் உள்ள நுாற்றுக்கணக்கான கிராமங்களில், தண்ணீர் தட்டுப்பாடு நீங்கி உள்ளது. மேலும், பாலாற்றில் செல்லும் வெள்ளத்தால், காஞ்சிபுரம் மாவட்டத்தின் பழமையான கால்வாயான, கம்ப கால்வாயில், 17

ஆண்டுகளுக்கு பின், தண்ணீர் செல்கிறது. வேலுார் மாவட்டம், ஆற்காடு அருகே உள்ள பாலாறு அணைக்கட்டில் இருந்து வரும், காவேரிப்பாக்கம் பிரதான கால்வாயில் இருந்து, கோவிந்தவாடி கால்வாய் பிரிகிறது.

அது, காஞ்சிபுரம் மாவட்டத்தில், கீழ்பாலாறு வடிநில பகுதியான, தைப்பாக்கம் கிராமத்தில் உள்ள, பிரிவு மதகில் இருந்து கம்ப கால்வாய் எனும் பிரதான கால்வாய் ஆகிறது. இந்த கால்வாய், 44.36 கி.மீ., துாரம் சென்று, கடைசியாக ஸ்ரீபெரும்புதுார் ஏரியை அடைகிறது. இந்த கால்வாய் மூலம், காஞ்சிபுரம் வட்டத்தில், 55 ஏரிகளின் கீழுள்ள, 15,105 ஏக்கர் விவசாய நிலங்கள்; ஸ்ரீபெரும்புதுார் தாலுகாவிற்கு உட்பட்ட, 30 ஏரிகளின் கீழுள்ள, 7,130 ஏக்கர் விவசாய நிலங்கள் என, 22,235 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன.

கால்வாய் :இந்த கால்வாயில் தண்ணீர் செல்வதால், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதுார் தாலுகாக்களில் உள்ள, 85 ஏரிகளும் தற்போது நிரம்பி உள்ளன. இந்த ஏரிகளுக்கு வரத்து கால்வாய்கள் இருந்தாலும், அவை துார்ந்ததால், இந்த கால்வாய் நீரால் நிரம்பியுள்ளன. கடந்த 17 ஆண்டுகளாக இந்த கால்வாயில் தண்ணீர் செல்லாததால், கால்வாயை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்திருந்தது.

இரு மாதங்களுக்கு முன்பு வரை, நான்கு லட்சம் ரூபாய் வரை செலவழித்து, 1,200 அடி வரை, ஆழ்துளை கிணறுகள் அமைத்தும் தண்ணீர் கிடைக்காமல், நெல்லை விதைக்க முடியாமல், 17 ஆண்டுகளாக சிரமப்பட்டு வந்துள்ளனர். ஓரளவு நீர் கிடைக்கப் பெற்ற விவசாயிகள், பயறு வகை, வேர்க்கடலை போன்றவற்றை பயிர் செய்து வந்தனர். பல விவசாயிகள், நிலம் இருந்தும் கூலி வேலைக்கு செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டது. உயர்வு:தற்போது கம்ப கால்வாயில் தண்ணீர் செல்வதால், கால்வாயின் அருகே உள்ள கிணறுகளில், நீர் சுரந்து, நிலத்தடி நீர் மட்டம் வேகமாக உயர்ந்துள்ளது.

இதனால், தற்போது பயிரிட்டுள்ள வேர்க்கடலையை அறுவடை செய்த பின், நெல்லை விதைக்க விவசாயிகளிடம் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம், 17 ஆண்டுகளுக்கு பின், பல விவசாயிகளின் வாழ்க்கை முறை மாற உள்ளது.

1200 ஆண்டுகள் பழமை!கி.பி., 814 - 850ம் ஆண்டுகளில், தென்னிந்தியாவில் ஏற்பட்ட பஞ்சத்தை போக்க, ஆங்காங்கே குளம், கால்வாய்கள் வெட்டும்

பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, பாலாற்றிலிருந்து, பூதன் ஏரி (ஸ்ரீபெரும்புதுார் ஏரி), திருமங்கலம், மாம்பாக்கம் ஆகிய ஏரிகளை இணைக்கும் வகையிலான கால்வாயை, கம்ப வர்ம பல்லவன் வெட்டினார்.

அவரால் வெட்டப்பட்ட அந்த கால்வாயை, 'கம்ப வர்ம கால்வாய்' என, மக்கள் அழைத்தனர். 1592ல் அந்த கால்வாய் ஆழப்படுத்தப்பட்டு, அதன் கரைகளை உயர்த்தும் பணியை, விஜயநகர அரசர் வெங்கடபதிராயர் மேற்கொண்டார். அந்த கால்வாயின் பெயர் மருவி, கம்ப கால்வாய் என, தற்போது அழைக்கப்படுகிறது. எனக்கு சொந்தமாக நிலம் இருந்தும், போதிய தண்ணீரின்றி, நெல் பயிரிட முடியவில்லை. ஆழ்துளை கிணறு அமைத்து, பல லட்சம் நஷ்டமாகியது. கம்ப கால்வாயில், தண்ணீர் செல்வதை அறிந்திருந்தால், வேர்க்கடலைக்கு பதிலாக, நெல்லை பயிரிட்டிருப்பேன். அடுத்து நெல் விதைக்க, தயாராக உள்ளேன். எங்கள் ஊரில் உள்ள கிணறுகளில் தண்ணீர் சுரந்திருப்பதை பார்த்தால் ஆச்சரியமாக உள்ளது.-யு.கருணாகரன் ஒழகோல்பட்டு கிராமம் கம்ப கால்வாயில், தண்ணீர் செல்லாததால், எங்கள் பகுதியில், நிலத்தடி நீர்மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றது. 17 ஆண்டுகளுக்கு முன், இந்த கால்வாயில் தண்ணீர் சென்றதை பார்த்தேன். அதையடுத்து, தற்போதுதான் பார்க்கிறேன். தண்ணீர் கிடைக்காததால், வதியூர், கூரம் பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள், ஊரக வாழ்வாதார வேலை உறுதி திட்டத்தில், பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. - பி.பரமேஸ்வரி வதியூர்.

## சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு விவசாயிகளுக்கு மானியம்

மதுரை:நுண்ணீர் பாசன திட்டத்தில் சொட்டு, ெதளிப்பு நீர் பாசனம் அமைக்க சிறு விவசாயிகளுக்கு நுாறு சதவீத மானியம் வழங்கப்படுகிறது.மதுரையில் இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் சாரநாத்பாபு கூறியதாவது: ஒரு சொட்டு நீர்; அதிகமான பயிர் என்பது நுண்ணீர் பாசன திட் டத்தின் நோக்கம். பயிர்களுக்கு தண்ணீர் அதிகமானாலும் கெடுதல்; குறைவானாலும் கெடுதல். குறைந்த தண்ணீரை பயன்படுத்தி, அதிக பரப்பில் பயிரிடுவதே நுண்ணீர் பாசன திட்டம். இதற்காக மத்திய அரசு 'பிரதமர் கிருஷி சன்சாயி யோஜனா' திட்டத்தை செயல்படுத்துகிறது. இதில் ஏற்கனவே செயல்படுத்தப்படும்

அனைத்து நீர்பாசன திட்டங்களையும் ஒருங்கிணைத்து கூடுதல் பரப்பினை விவசாயத்திற்கு கொண்டு வருதல், துல்லிய பாசனத்தை செயல்படுத்துதல் நோக்கங்களாகும். நுண்ணீர் பாசன திட்டம் மாவட்டத்தில் வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதன்கீழ் 2015-16க்கு 242.15 எக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தென்னை போன்ற அதிக இடைெவளி உள்ள மரங்கள், பருத்தி, துவரை, கரும்பு போன்ற குறுகிய இடைெவளி பயிர்கள் மற்றும் நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு சொட்டு மற்றும் ெதளிப்பு நீர்பாசனம் அமைக்கலாம்.

சிறு விவசாயிகளுக்கு 100, பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிகளுக்கு அதிகபட்சம் 5 எக்டேர் வரை மானியம் வழங்கப்படும். டிச., 31க்குள் திட்டத்தை முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள், பயிர்களுக்கு நுண்ணீர் பாசனத்தை செயல்படுத்த வேண்டும், என்றார்.

## மழையால் பயிர்களுக்கு பாதிப்பு: வேதனையில் விவசாயிகள்

பேரையூர்:பேரையூர் பகுதியில் மழையால் விளைநிலங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் பல்வேறு பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.சில ஆண்டுகளாக இப்பகுதியில் மழை இல்லாததால் விவசாய பணிகள் நடக்கவில்லை. கடன் பெற்று விவசாயம் செய்தும் தண்ணீர் இன்றி பயிர்கள் பாதிக்கப்பட்டன. இந்நிலையில் இந்தாண்டு சில வாரங்களாக மழை பெய்தது. இதனால் கண்மாய்கள், குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கண்மாய்களுக்கு வரத்துக்கால்வாய்கள் சரியின்றி மழைநீர் திசைமாறி வயல்களுக்குள் புகுந்தது. 5,000 ஏக்கரில் வெள்ளநீர் புகுந்ததால் பாசிப்பயறு, உளுந்து, பருத்தி, சோளம், நெல், மக்காச்சோளம், மிளகாய்,

குதிரைவாலி, மல்லி போன்ற பயிர்கள் நீரில் மூழ்கி சேதமாயின. இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

**மானிய விலையில் கருவிகள் பெற ஆள் பற்றாக்குறையை சமாளிக்க நல்ல நேரம்!**



பொள்ளாச்சி: வேளாண் பணிக்கு ஆள் கிடைக்காத நிலையில், வேளாண் பொறியியல் துறை சார்பில், விதவிதமான கருவிகள் மற்றும் இயந்திரங்களை விவசாயிகளுக்காக அறிமுகப்படுத்தி, மானிய விலையிலும் வழங்குகிறது. வடகிழக்கு பருவமழை பொழிந்து, பாசன கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து, நிலத்தையும் ஈரப்படுத்தியுள்ள நிலையில், விவசாயிகள் பயிர்சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இதற்காக நிலத்தை உழுது பண்படுத்த ஆயத்தமாகியுள்ளனர்.

நிலத்தை பலமுறை உழுது, மண்ணை புரட்டி போட்ட பின்பு, ஏற்கனவே முடிவு செய்தபடி விதைப்புக்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இன்றைய வேளாண்மையில், நவீன உத்திகளை கையாண்டு அவர்கள் பயிர்சாகுபடி செய்து வருகின்றனர். இதனால், விளைநிலம் குறைந்த நிலையிலும் விளைச்சல் அதிகமாக எடுக்கப்படுகிறது. விளைச்சலை பெருக்க தமிழக வேளாண்துறையும், வேளாண் பொறியியல் துறையும் பல்வேறு நடவடிக்கையை எடுத்து வருகிறது. விவசாயத்துக்கு தற்போது ஆள்பற்றாக்குறை அதிகரித்துள்ளது. இதை சமாளித்து, உற்பத்தியை பெருக்குவதற்காக, வேளாண் பொறியியல் துறை பல்வேறு கருவிகள் மற்றும் இயந்திரங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. இக்கருவிகளை, அந்தந்த வட்டார வேளாண் பொறியியல் துறை சார்பில், விவசாயிகளுக்கு குறைந்த விலையிலும், வாடகைக்கும் வழங்கப்படுகிறது. நடப்பு 2015 - 2016ம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், நிலக்கடலை, மக்காச்சோளம், சூரியகாந்தி,

கம்பு, பனிக்கடலை உள்ளிட்ட அனைத்து பயிர்களின் விதைகளை டிராக்டர் மூலம் விதைக்க விதைப்பு கருவி மானிய விலையில் தயாராக உள்ளது.

இதேபோல, நெல் நாற்று நடும் இயந்திரம், (8 வரிசைக்கும் கூடுதலாக) உள்ளிட்ட கருவிகள் தயார் நிலையில் உள்ளன. இக்கருவிகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் பொள்ளாச்சி வேளாண் பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர், உடுமலை ரோடு (சின்னாம்பாளையம் ஸ்டேட் பேங்க் அருகில்), பொள்ளாச்சி என்ற முகவரியில் அணுகலாம். அலுவலக டெலிபொன் எண்:04259 - 237271 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

**சோலையாறு அணை நீர்மட்டம் உயர்வு**

வால்பாறை: அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் தண்ணீர்வரத்து அதிகரித்துள்ளதால், சோலையாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

வால்பாறை நகர் மற்றும் எஸ்டேட் பகுதியில் நேற்று மாலை தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக கனமழை பெய்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.மழையினால், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்றுமுன்தினம் காலை, 81.39 அடியாக இருந்தது. நேற்று காலை 83.28 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு, 331 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை, 55.61 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு, 11 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு, 855 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் நேற்று காலை 8:00 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீ.,): வால்பாறை-10, மேல்நீராறு-10, சோலையாறு-20, கீழ்நீராறு-52.

## மாவட்ட வேளாண் துறைக்கு ரூ.16.48 கோடி நிவாரணம்

வாலாஜாபாத்;காஞ்சிபுரம் மாவட்டத்தில் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு, முதல்கட்டமாக, 16.48 கோடி ரூபாய் நிவாரணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த நிவாரண தொகையை விவசாயிகளின் வங்கி கணக்கில், செலுத்தப்பட உள்ளது என, வேளாண் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில், நவம்பரில் துவங்கிய வட கிழக்குப் பருவ மழையால், 21 ஆயிரம் ஏக்கர் விளை நிலம் நீரில் முழ்கி, பயிர்கள் சேதமடைந்தன.

சேதத்திற்கு ஏற்றவாறு நிவாரணம் வழங்க கணக்கெடுப்பு நடத்திய வேளாண் துறை, கடந்த 20ம் தேதி, தமிழக அரசிற்கு நிதி கேட்டு, பரிந்துரை செய்தது. அதன்படி, தமிழ அரசு, முதல் கட்டமாக, 4,951 ஏக்கருக்கு, 16.48 கோடி ரூபாய் நிவாரண நிதியை ஒதுக்கீடு செய்து உள்ளது. இதுகுறித்து, வேளாண் துறை இணை இயக்குனர் சீதாராமன் கூறியதாவது: ஒரு ஏக்கர் நெற்பயிறுக்கு, 5,465 ரூபாயும்; பயறு வகைகளுக்கு ஒரு ஏக்கருக்கு 3,000 ரூபாயும் வழங்கப்பட உள்ளது. விவசாயிகளின் கூட்டுறவு வேளாண் வங்கி கணக்கில் நிவாரணத்தை தொகையை செலுத்த உள்ளோம். வங்கி கணக்கு இல்லாதவர்கள் வங்கியில் கணக்கு துவங்கிய பின் அதில் செலுத்த உள்ளோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்

உத்திரமேரூர்;தொடர் மழையால், சம்பா பட்ட சாகுபடி பாதிப்படைந்ததையடுத்து, நவரை சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.உத்திரமேரூர் ஒன்றியத்தில், சம்பா பட்டத்தில், 2,000 ஏக்கர் நிலத்தில், கிணற்று பாசனத்தின் மூலம், நெல் பயிரிடப்பட்டது. அந்த பயிர்கள் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்தபோது, கடந்த மாதம் முதல், தொடர்ந்து கன மழை பெய்ததால், நீரில் மூழ்கி, 1,750 ஏக்கர் நெற்பயிர்கள் வீணாயின. இதையடுத்து, அப்பகுதி விவசாயிகள் நவரை சாகுபடிக்கு தயாராவதற்காக, வீணான நெற்பயிரை அறுவடை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, மலையாங்குளம் பகுதி விவசாயிகள் கூறியதாவது:நீரில் மூழ்கி வீணான பயிர்களுக்கு, அரசு அறிவித்த நிவாரணம் பெற, வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளோம். சம்பா சாகுபடி வீணானதையடுத்து,

நவரை சாகுபடிக்கு தயாராகி வருகிறோம். அதற்காக, வீணான நெற்பயிரை அறுவடை செய்து வருகிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தர்மபுரி மண்டலத்தில், 3,200 ஹெக்டேரில் சந்தன மரங்கள் வளர்க்க நடவடிக்கை**

தர்மபுரி: "தர்மபுரி வன மண்டலத்தில், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள வனப்பகுதிகளில், 3,200 ஹெக்டேரில் சந்தன மரங்கள் வளர்க்க, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என, மண்டல வன பதுகாவலர் உலகநாதன் கூறினார். இதுகுறித்து அவர் கூறியதாவது: தமிழகத்தில், சமூக விரோதிகளால் சந்தன மரங்கள் அதிகளவில் வெட்டி கடத்தப்பட்டுள்ளதால், வன பகுதிகளில் மரங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. சந்தன மரங்களின் எண்ணிக்கையை அதிகாரிக்க வனத்துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வன கோட்டங்களில், 3,200 ஹெக்டேரில், சந்தன மரங்கள் நடவு செய்யும் பணி தொடங்கியுள்ளது.

சந்தன மரங்களின் விதைகளை நடவு செய்யும் முறை குறித்தும், மரம் வளர்க்கும் ஆர்வத்தை தூண்டும் வகையில், தர்மபுரி ரேஞ்சர் அலுவலக வளாகத்தில் சந்தன விதைகளை தயார் செய்யும் முறை குறித்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வன விலங்குகள் வேட்டையாடுவதை தடுக்க, தர்மபுரி வன கோட்டத்தில், 9, அரூர் வன கோட்டத்தில், 5, ஓசூர் வன கோட்டத்தில், 18 என, வேட்டை தடுப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர், வன விலங்குகள் அதிகம் உள்ள பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டு, வன விலங்கு வேட்டையாடுவதை தடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாக்க பட்டியலில் உள்ள வன விலங்குகளான, சிறுத்தை, புலி, யானை, மான், காட்டுப்பன்றி போன்ற வன விலங்குகளை வேட்டையாடுபவர்கள் மீது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். உதவி மண்டல வன பாதுகாவலர் வரதராஜன், தர்மபுரி டி.எப்.ஓ., திருமால், சுற்றுச்சூழல் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கால்நடை மருத்துவ முகாம்

ஓசூர்: ஓசூர் அடுத்த பாகலூர் அருகே, சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. ஓசூர் தாலுகா பாகலூர் அடுத்த சொக்கநாதபுரம் கிராமத்தில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. இதில், 178 மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 876 செம்பறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. 22 மாடுகளுக்கு மலடு நீக்கம், 12 மாடுகளுக்கு சினை பரிசோதனை ஆகியவற்றை, பாகலூர் கால்நடை உதவி மருத்துவர் தயாநிதி தலைமையிலான டாக்டர் குழுவினர் மேற்கொண்டனர்.

## பவானி ஆற்றில் தண்ணீர் திறப்பு

சத்தியமங்கலம்: தொடர்மழை காரணமாக, சத்தியமங்கலம் பவானி ஆற்றில், கடந்த மாதம், 30ம் தேதி முதல் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. இதனால் ஆற்றில் ஓடிய மழை நீர், மக்களுக்கு குடிநீராக பயன்பட்டு வந்தது. கடந்த, நான்கு நாட்களாக மழை இல்லை. இதனால், நேற்று காலை, 8 மணி முதல், பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் குடிநீருக்காக வினாடிக்கு, 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளின் குழந்தைகளுக்கும் கல்வி உதவித்தொகை

கோத்தகிரி: 'எஸ்டேட் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித்தொகை, எதிர்காலத்தில் சிறு விவசாயிகளின் குழந்தைகளுக்கும் வழங்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. கோத்தகிரி கப்பட்டி கிராமத்தில் சிறு தேயிலை விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

தேயிலை வாரிய துணை இயக்குனர் ஹரிபிரகாஷ் வரவேற்றார். ஊர் தலைவர் அஜ்ஜா கவுடர் தலைமை வகித்தார். தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு, கேத்தரய்யன் சிறுவிசாயிகள் சங்கத்தை திறந்து வைத்து பேசியதாவது: தேயிலை எஸ்டேட் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, தேயிலை வாரியம் மூலம், கல்வி உதவித்தொகை கிடைத்து வந்தது. ஆனால், சிறு குறு விவசாயிகளின் குழந்தைகளுக்கு அதன் பயன் கிடைக்காமல் போனது. நடப்பாண்டு, மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறு மற்றும் குறு

விவசாயிகளின் குழந்தைகளுக்கும் தேயிலை வாரியத்தின் கல்வி உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் மற்றும் விவசாயிகளிடம் ஆலோசனை நடத்தி, இத்திட்டம் செயல்படுத்தப்படும். விவசாயிகள் ஓரளவு தரமான பசுந்தேயிலை வினியோகித்தால், 12.50 ரூபாய்க்கு குறையாமல், சராசரி விலை வழங்க தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 'சில்வர் டிப் டீ மற்றும் ஹேண்ட் ரோல் டீ' தயாரிக்கும் விவசாயிகளுக்கு சந்தையில், குறைந்தப்பட்சம், 1500 ரூபாய் வரை கிலோவுக்கு விலை கிடைக்கும் என்பதால், அதனை தயாரிக்க முன்வரவேண்டும். இவ்வாறு பால்ராசு பேசினார். தொடர்ந்து, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதில், எட்டூர் தலைவர் ஆலா கவுடர், தோட்டக்கலை விதை அலுவலர் சந்திரன், தேயிலை வாரிய வளர்ச்சி அதிகாரி உமா மகேஷ்வரி, தேயிலை விவசாயி குமரன் உட்பட, விவசாயிகள் பலர் பங்கேற்றனர். கப்பட்டி கிராம விவசாயி மனோகரன் நன்றி கூறினார்.

**பசுந்தேயிலை வரத்து குறைவு தொழிற்சாலைகளில் உற்பத்தி பாதிப்பு**

குன்னூர்: 'பசுந்தேயிலை வரத்து குறைந்ததால், தொழிற்சாலைகளில், 50 சதவீதம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது' என, உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஒரு மாத காலமாக, குன்னூர், உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளில் பெய்த தொடர் மழை, மேகமூட்டம் காரணமாக, தேயிலை செடிகளுக்கு கொப்பள நோய் தாக்கியுள்ளதுடன் வரத்தும் குறைந்துள்ளது. இந்நிலையில், பசுந்தேயிலை வரத்தும் குறைந்துள்ளதால், குன்னூர் பகுதிகளில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளில், 50 சதவீதம் வரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பல தொழிற்சாலைகளில், சில இயந்திரங்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் வேலை பாதிக்கப்பட்டுள்ளது. உபாசி தேயிலை ஆராய்ச்சி நிலைய துணை இயக்குனர் உதயபானு கூறுகையில்,"மாவட்டத்தில் கடந்த, 2014 ஆண்டு நவம்பர் மாதத்தில், ஒரு எக்டர் பரப்பளவிலான பசுந்தேயிலையில், ஒரு நாளைக்கு, 179 கிலோ உற்பத்தி செய்த நிலையில், இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், ஒரு நாளைக்கு, 171 கிலோ தேயிலை துாள் உற்பத்தியாகியுள்ளது. "டிசம்பரில், ஒரு

எக்டர் பரப்பளவில்,560 கிலோ பசுந்தேயிலை எடுக்கப்பட்டதில், தொழிற்சாலைகளில்,139 கிலோ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மழையின் தாக்கம் காரணமாக, பசுந்தேயிலை எடுப்பதிலும், உற்பத்தியும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பனியின் தாக்கம் குறைந்தால், தேயிலை வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

## 700 ஏக்கர் மரவள்ளி அழுகல்: நிவாரணம் வழங்க கோரிக்கை

கரூர்: மழையால் மரவள்ளி அழுகல் பாதிப்பு ஏற்பட்டதால், நிவாரணம் கேட்டு விவசாயிகள் மனு அளித்தனர். மண்மங்கலம் சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்ட, 700 ஏக்கர் மரவள்ளி கிழங்கு அழுகி விட்டதால், நிவாரணம் வழங்க வேண்டும் என்று, விவசாயிகள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

அப்போது, விவசாயிகள் கூறியதாவது: கரூர் மாவட்டத்தில், மண்மங்கலம், சிவியாம்பாளையம், நொய்யல், வேலாயுதம்பாளைம் உள்ளிட்ட பகுதியில் மானாவாரியில், 700 ஏக்கர் வரை மரவள்ளி சாகுபடி செய்துள்ளோம். தற்போது பெய்த கன மழையால் கிழங்கு முழுவதும் அழுகி விட்டது. குறிப்பாக மண்மங்கலம் அடுத்த, சிவியாம்பாளையம் பகுதியில் பயிர்கள், தற்போது பெய்த கனமழையால் மிகவும் சேதம் அடைந்து விட்டது. ஒரு ஏக்கர் மரவள்ளி சாகுபடி செய்ய, 30 ஆயிரம் ரூபாய் முதல், 40 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. இதனால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளோம். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தை மாதத்தில் முருங்கை சாகுபடி அதிகரிக்கும்: தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: கரூர் மாவட்டத்தில் பெய்துள்ள தொடர்மழையால், அரவக்குறிச்சி பகுதிகளில் முருங்கை சாகுபடி பணிகள் விறுவிறுப்பாக உள்ளது. இதனால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியில் உள்ளனர். அரவக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளான கொத்தப்பாளையம், தடா கோவில், வெஞ்சாங்கூடலூர்,

ஈசநத்தம், அம்மாப்பட்டி, ஊத்தூர், பெரியமஞ்சு வளி சேந்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில், 50 ஆயிரம் ஏக்கரில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. திரட்சியான தடிப்பான அரவக்குறிச்சியில் விளையும் ருசியான முருங்கைக்கு தமிழகம் மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலும் நல்ல வரவேற்பு உண்டு. குறிப்பாக சீசன் காலங்களில் நாள்தோறும் 15 லாரி முதல், 25 லாரிகளின் அரவக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகளில் இருந்து டெல்லி, மும்பை, பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பபட்டது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், அரவக்குறிச்சி வட்டாரத்தில் முருங்கை உற்பத்தி குறைந்தது. இதனால், விலையும் உயர்ந்தது. குறிப்பாக, கடந்தாண்டு தை மாதங்களில், 20 காய்கள் கொண்ட ஒரு கட்டு முருங்கை விலை கடந்த மாதம், 100 ரூபாய் முதல், 175 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஒரு முருங்கைகாய் எட்டு ரூபாயில் இருந்து, 10 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டு வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவை விட அதிகளவில் கரூர் மாவட்டத்தில் பெய்துள்ளது. மேலும், அமராவதி ஆற்றிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், அரவக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, முருங்கை மரங்களை சாகுபடிக்கு தயார்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கடும் மழையால் முருங்கை மரங்களில் பூக்கள் துளிர் விட ஆரம்பித்துள்ளது. இதனால், காய் உற்பத்தி எதிர்பார்த்த அளவில் இருக்கும். மேலும் காய்கள் முழு வளர்ச்சியடைந்து பெரியளவில் வரும். இன்னும் ஒரு மாதத்துக்கு பிறகு, தை மாதம் பிறக்க உள்ளது. அந்த மாதத்தில் அதிகளவில் திருமணம் சீசன் உள்ளிட்ட சுப காரியங்கள் தொடங்கும். அப்போது, முருங்கைக்கு அதிகளவில் தேவை ஏற்படும். தற்போது, முருங்கை விலை குறைந்துள்ள நிலையில், வரும் தை மாதத்தில் முருங்கை சாகுபடி அதிகரிக்கும். மேலும் விலை குறைய வாய்ப்புண்டு. இதனால், நடப்பாண்டு தை மாதங்களில் நடக்கும் திருமணங்களில், உணவில் முருங்கை கட்டாயம் இடம் பெறும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பயிர் காப்பீடு செய்யஇன்றே கடைசி

ராமநாதபுரம்:தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் பிரிமீயம் செலுத்த இன்றே கடைசி நாள் (டிச., 15) என,

ராமநாதபுரம் வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார்.அவர் கூறியதாவது: தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் நெல் போன்ற அனைத்து வகை உணவு பயிர்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், தோட்ட பயிர்கள் ஆகியவற்றை இன்சூரன்ஸ் செய்யலாம். வெள்ளம், வறட்சி, பூச்சி தாக்குதல், நோய் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப் படும். குத்தகைகாரர் உட்பட அனைத்து விவசாயிகளும் இன்சூரன்ஸ் செய்யலாம். கடன் பெறாதோர்: நெல் பயிருக்கு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் ரூ.134 ம், இதர விவசாயிகள் ரூ.149 ம் பிரிமீயமாக டிச., 15 க்குள் செலுத்த வேண்டும். கூடுதல் பிரிமீயமாக ஏக்கருக்கு ரூ.3,133 செலுத்தலாம்.கடன் பெறுவோர்: நெல் பயிருக்கு ஏக்கருக்கு அனைத்து விவசாயிகளும் ரூ.149 ம் பிரிமீயமாக டிச., 31 க்குள் செலுத்த வேண்டும். கூடுதல் பிரிமீயமாக ஏக்கருக்கு ரூ.3,148 செலுத்தலாம். இன்சூரன்ஸ் குறித்த விபரங்கள், விண்ணப்பங்களை அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் பெற்று கொள்ளலாம். பிரிமீயத் தொகையை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய வங்கிகளில் செலுத்தலாம், என்றார்.

## அரசு மானியத்தில் ஆயில் மோட்டார்

திருவாடானை; திருவாடானை வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.10 ஆயிரம் மானியத்தில் விவசாயிகளுக்கு ஆயில் மோட்டார்கள் வழங்கப் படுகின்றன. இதற்கு மானாவாரி, பகுதி மானா வாரியாக நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விண்ணப் பிக்கலாம். இந்த மோட்டார்களை பண்ணைகுட்டைகள் மற்றும் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க பயன்படுத்த முடியும். விபரங்களுக்கு 04561-254340ல் தொடர்பு கொள்ளலாம் என, வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ் தெரிவித்தார்

## உயிருடன் ஜோடி ரூ.300 முயல் விற்பனை ஜோர்

பனைக்குளம்:பனைக்குளம், அழகன்குளம், புதுவலசை பகுதிகளில் சட்டவிரோதமாக முயல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஒருஜோடி

முயல்கள் ரூ.300க்கு விற்பனையாகிறது. முயல் விற்பனையில் பெரும்பாலும் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். குற்றுயிரும், குலையிருமாக மயங்கிய நிலையில் உள்ள முயல்களில் உயிருள்ள முயல்களுடன், இறந்த முயல்களை பாதிவிலையிலு<ம் விற்பனை செய்கின்றனர். கடலோரக் கிராமங்கள், வனப்பகுதிகளில் இரவு நேரங்களில் வேட்டையாடப்படும் முயல்கள் மறுநாள் காலை சாக்கு மூடைகளில் அடைத்து விற்பனைக்காக பஸ்சில் ராமநாதபுரம் கொண்டுவருகின்றனர். அலை பேசி மூலம் வாடிக்கையாளர்களை தொடர்புகொண்டு முயல்களை ரகசியமாக விற்பனை செய்கின்றனர். இதனால் வயல்வெளி, வனப்பகுதிகளை வசிப்பிடமாக கொண்டுள்ள அரியவகை முயல் இனங்கள் அழிவின் விளிம்பில் உள்ளது. முயல் வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்க வனத்துறையினர் முன்வரவேண்டும்.

**மன்னார்குடி மரவள்ளி கிழங்கு:ஆர்.எஸ்.மங்கலத்தில் விற்பனை**

ஆர்.எஸ்.மங்கலம்: திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் அதிகளவில் மரவள்ளி கிழங்குகள் சாகுபடி செய்யப்படுகின்றன. அந்த மாவட்டங்களில் மன்னார்குடி, பருவாக்கோட்டை, வடச்சேரி, தளிக்கோட்டை பகுதிகளில் விளையும் கிழங்குகளுக்கு மற்ற பகுதிகளில் நல்ல வரவேற்பு உள்ளது. அப்பகுதி மரவள்ளி கிழக்குகள் ஆர்.எஸ்.மங்கலம் வார சந்தைக்கு விற்பனைக்கு வந்தன.கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப் பட்டன. மர வள்ளி கிழங்குகளில் மருத்துவ தன்மை உள்ளதால் அவற்றை மக்கள் அதிகளவில் வாங்கி சென்றனர். இதனால் ஒரே நாளில் 5 ஆயிரம் கிலோ மரவள்ளி கிழங்குகள் விற்பனையாகின.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நெல் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

உடுமலை வட்ட வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) சார்பில் நெல் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. உடுமலையை அடுத்துள்ள வலையபாளையம் கிராமத்தில் நடைபெற்ற இந்த முகாமிற்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர் மகாலிங்கம் தலைமை வகித்தார். அலுவலர் அ.அமல்ராஜ் வரவேற்றார்.

இதில், நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான வழி முறைகள், தொழில் நுட்பங்கள், விதை நெல் உற்பத்தி செய்யும் வழி முறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும் விதைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் நெல், பயிறு விதைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் தன்மை, விதைத் தூய்மை, ஈரப்பதம், கடைபிடிக்க வேண்டிய நெறி முறைகள் ஆகியவை குறித்தும் தெரிவிக்கப்பட்டன. நெல், தென்னை மற்றும் இதரப் பயிர்களை அறுவடைக்கு பின்னர் சேமித்து வைக்கும் முறைகள் குறித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கண்காணிப்பாளர் சந்திரசேகரன் பேசினார். முகாமில் வலையபாளையம், வல்லக்குண்டாபுரம் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வது அவசியம்**

நோய் எதிர்ப்பு சக்தி குறைவால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க மழைக் காலத்தில் குறைந்த இடைவெளி நாள்களில் குடற்புழு நீக்கம் செய்வது அவசியம் என கால்நடை பராமரிப்பு துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறையின் பல்லடம் மருத்துவர் நடராஜன் கூறியது. கால்நடைகளை அதிகம் தாக்கும் நோய்களுள் குடற்புழு நோயும் ஒன்று. மாடுகளை மட்டுமின்றி, அனைத்துக் கால்நடைகளையுமே இப்புழுக்கள் தாக்குகின்றன. இருப்பினும், அதிகப்பட்சமாகப் பாதிக்கப்படுவது மாடுகள் தான். புழுக்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் வரை பாதிப்புகள் வெளிப்படையாக ஏற்படுத்துவதில்லை. புழுக்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் நோயின் பாதிப்பும் அதிகரித்தே காணப்படும். பெரும்பான்மையான கன்றுகள்,

குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள எருமைக் கன்றுகள் பிறந்ததும் உடனடியாக உருண்டை புழுவின் பாதிப்புக்கு உள்ளாகின்றன. அவற்றின் சீம்பால் மற்றும் கன்று ஈன்ற முதல் இரண்டு வாரங்களில் வரும் பாலை கன்றுகள் அருந்துவதால் அதிலுள்ள புழுக்கள், கன்றுகளை நோய் தாக்குதலுக்கு உள்ளாக்கி, இறக்கும் நிலைக்கு கொண்டு செல்கிறது.

கால்நடைகள், தட்டைப் புழுக்கள், நாடாப் புழுக்கள் மற்றும் உருண்டைப் புழுக்களால் பாதிக்கப்படுகின்றன. குடற்புழுக்களால் பாதிக்கப்படும் கால்நடைகளின் வயிற்றில் மிகுதியான வீக்கம் ஏற்படும். உடல் எடை குறைந்து எந்நேரத்திலும் சோர்ந்து காணப்படும். தாடையின் கீழ் பகுதியில் வீக்கம் காணப்படும். வயிற்றுப்போக்கு மற்றும் ரத்த சோகையால் பாதிக்கப்படுகிறது. சில கால்நடைகள் பால் உற்பத்தி திறன் பாதிக்கப்பட்டு, பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. சாதாரண நாள்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும். மழைக் காலத்தில் இரண்டு மாதத்துக்கு ஒரு முறையும் கட்டாயம் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும். குடற்புழு நீக்கத்துக்கு 6 வகையான தடுப்பூசிகள் போடப்படுகின்றன. தொடர்ந்து புழு நீக்கத்துக்கு ஒரே மருந்தை வழங்குவதால், புழுக்களின் பாதிப்பை குறைக்க முடியாது. சுழற்சி முறையில் 6 மருந்துகளையும் குறிப்பிட்ட இடைவெளியில் கால் நடைகளுக்கு வழங்க வேண்டும். கன்றுகளுக்குத் தொடர்ச்சியாக ஆறு மாத காலமும் பின்னர் மூன்று மாத இடைவெளியிலும் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

குடற்புழு நீக்கம் செய்வதனால் கால்நடைகளுக்கு சினை உற்பத்தி அதிகரிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியையும் உணவு உள்கொள்ளும் திறனையும் அதிகரிக்கிறது. உணவுகளிலுள்ள ஊட்டச்சத்தை முழுமையாக கால்நடைகளுக்கு கொண்டு சேர்க்கிறது. மாடுகளுக்கு பால் கறக்கும் அளவை அதிகரிப்பதோடு, ஆடுகளுக்கு அதிக குட்டிகளை ஈன்றும் வாய்ப்பை வழங்குகிறது. விவசாயிகள் தவறாமல் அட்டவணையிட்டு, சுழற்சி முறையில் தொடர்ந்து குடற்புழு நீக்கம் செய்து கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

**விவசாயப் பயிர்களில் மர்மபூச்சி தாக்குதல்: பெரியகுளத்தில் 150 ஏக்கர் விவசாயம் பாதிப்பு**

சத்தி அருகே விவசாயப் பயிர்களில் விஷப் பூச்சி தாக்கியதால் 150 ஏக்கரில் சாகுபடி செய்த கரும்பு, வாழை, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு பாதிப்பு

ஏற்பட்டுள்ளது. சத்தியமங்கலம் நகராட்சி, பெரியகுளம் பகுதியில் உள்ள 150 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களில் கரும்பு, வாழை, சோளம் உள்ளிட்ட பல்வேறு விவசாயப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இக்கிராமத்தில் உள்ள தூறி மாரியம்மன் கோயில் ஆறுமுகம் என்பவர் தோட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட கரும்புப் பயிரில் மர்மபூச்சி தாக்கியது. இந்தப் பூச்சியை ஒழிக்க நோய்தடுப்பு மருந்து தெளிக்கப்பட்டும் பயனில்லை. அதன் தாக்குதல் மேலும் அதிகமாகி பிற தோட்டங்களிலும் பரவியது. கூடு கட்டி ஒன்றாக சேர்ந்து தாக்கும் இந்த பூச்சி கடித்தால் மனிதர்களுக்கு அரிப்பு, புண் ஏற்படுகிறது. விஷத்தன்மையுள்ள இந்த பூச்சிகளால் அப்பகுதியில் உள்ள 150-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு, வாழை, சோளம் மற்றும் சம்பங்கி பயிர்கள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. மேலும், தவளை, எலி, பாம்பு போன்றவையும் உயிரிழந்துள்ளன. மேலும், பூச்சி தாக்குவதால் விவசாயப்பணிக்கு தொழிலாளர்கள் வர தயங்குகின்றனர். இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் வேளாண் விவசாய அலுவலகத்தில் புகார் தெரிவித்தனர். அங்கு வந்த வேளாண் ஆராய்ச்சியாளர்கள், பூச்சி மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட பயிர்களை மாதிரி எடுத்து ஆராய்ச்சி மையத்துக்கு அனுப்பி உள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்புப் பயிற்சி**

பயறு வகைப் பயிர்களின் பாதுகாப்பு குறித்து பயிற்சி விவசாயிகளுக்கு திங்கள்கிழமை அளிக்கப்பட்டது. காரிமங்கலம் வட்டார வேளாண் துறை சார்பில், பையூர் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு, ஆராய்ச்சி நிலையத் தலைவர் புத்தர் தலைமை வகித்துத் தொடக்கி வைத்தார். இதில், விவசாயிகளுக்கு பல்ஸ் ஒண்டர் கரைசல் தெளிக்கும் முறை மற்றும் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்கும் முறை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மூன்று நாள்கள் நடைபெற்ற பயிற்சி நிறைவையொட்டி, வேளாண் உதவி இயக்குநர் (பொ)இளங்கோவன், விவசாயிகளுக்கு சான்றிதழ்கள், பயறு வகைகள் தொடர்பான கையேடுகளை வழங்கினார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ச.இளவரசி, உதவித் தொழில்நுட்ப மேலாளர் ஜீ.சேட்டு, காரிமங்கலம் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த பயறுவகை பயிர் சாகுபடி செய்யும் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வேதாரண்யம் சுற்றுப் பகுதியில் பலத்த மழை**

வேதாரண்யம், தலைஞாயிறு பகுதி சுற்றுவட்டாரக் கிராமங்களில் திங்கள்கிழமை பலத்த மழை பெய்தது. வேதாரண்யத்தில் அண்மைக் காலமாக பலத்த மழை பெய்தது. தற்போது மழையின்றி நீர் வெளியேறி வரும் நிலையில் திங்கள்கிழமை வேதாரண்யத்தில் லேசான மழையும், சுற்றுவட்டாரக் கிராமப் பகுதிகளான வாய்மேடு, ஆயக்காரன்புலம், கரியாப்பட்டினம், நீர்முளை, அருந்தவம்புலம் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மணி நேரம் பலத்த மழையும் பெய்தது.

**"இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்'**

இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என மதர் இந்தியா ஃபார்ம்ஸ் நிறுவனர் ஆர்.துரைராஜ் தெரிவித்தார்.

பெங்களூரில் திங்கள்கிழமை இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்களை அறிமுகம் செய்து வைத்து அவர் பேசியது: பன்னாட்டு நிறுவனங்கள் செயற்கையான முறையில் குளிர்பானங்களை தயாரிப்பதால், அதனை அருந்துபவர்களுக்கு பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. அதுபோன்ற குளிர்பானங்கள் தயாரிப்பதால், விவசாயிகளுக்கு எந்த பலனும் கிடைப்பதில்லை. இந்தியாவில் இயற்கையான முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் அதிக அளவில் உள்ளனர். அவர்கள் பயிர் செய்யும் காய், கனிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதனால், அவர்கள் துவண்டு விவசாயத்தை கைவிடும் நிலையில் உள்ளனர். எனவே, விவசாயிகளை ஊக்குவிக்க அரசு புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும்.

இயற்கையான முறையில் பயிரிடப்பட்ட உணவுப் பொருள்களை வாங்க பொதுமக்கள் முன் வரவேண்டும். அதன் மூலம் தங்களது உடல் நலத்தை பாதுகாப்பதோடு, விவசாயிகளின் நிலையை உயர்த்த உதவு முடியும்.

மேலும், நிகழாண்டில் கர்நாடகத்தில் விவசாயிகள் அதிக அளவில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விவசாயிகளைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயம் செழிக்கும் நாடே, பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கும் என்றார்.

**மழையால் பாதிக்கப்பட்ட வயல்களில் ஆட்சியர் ஆய்வு**

தொடர் மழையால் பெரம்பலூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள சின்ன வெங்காயம், மக்காசோளம் மற்றும் பருத்தி வயல்களை திங்கள்கிழமை ஆட்சியர் தரேஸ் அஹமது பார்வையிட்டார். பெரம்பலூர் வட்டத்துக்குள்பட்ட கே.புதூரில் சேதமடைந்துள்ள சின்ன வெய்காயத்தையும், வேப்பந்தட்டை வட்டத்துக்குள்பட்ட அன்னமங்கலம், அரசலூர் ஆகிய பகுதிகளில் சேதமடைந்த மக்காச்சோள வயல்களிலும், வெண்பாவூரில் பருத்தி வயல்களையும் பார்வையிட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது கூறியது: நிகழாண்டு வடகிழக்கு பருவமழை சராசரி அளவை விட அதிகமாகவும், தொடர்ச்சியாகவும் பெய்ததால் பெரம்பலூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த மக்காச்சோளம், பருத்தி, சின்ன வெங்காயம் மற்றும் மரவள்ளி பயிர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணம் வழங்கலாம் என அரசாணை பெறப்பட்டுள்ளது. எனவே, 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களின் முதற்கட்ட கணக்கெடுப்பின் விவரம் 19.11.2015 ஆம் தேதி அரசுக்கு அனுப்பப்பட்டது. அதன்படி, 210.92 ஹெக்டேர் மக்காச்சோளமும், 1.01 ஹெக்டேர் வாழையும், 0.15 ஹெக்டேர் புடலையும், 1.4 ஹெக்டேர் பாக்கு மரங்கள் என மொத்தம் 219.93 ஹெக்டேருக்கு நிவாரணம் வழங்க ரூ. 16.91 லட்சம் பெறப்பட்டுள்ளது. இந்த தொகை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவாசாயிகளின் வங்கி கணக்கில் வழங்கப்படும். மேலும், தொடர் மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட பருத்தி மற்றும் இதர பயிர் பாதிப்பு குறித்து 2 ஆம் கட்டமாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்வறிக்கையும் தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர். இந்த ஆய்வின்போது, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மைய தலைவர் கவிமணி, இணை பேராசிரியர் சிவக்குமார், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் பெரியசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

"மழைச் சேதம்: 500 ஏக்கர் பயிருக்கு நிவாரணம் தேவை'

திருநெல்வேலி மாவட்டத்தில் கனமழையால் 500 ஏக்கரில் சிறுகிழங்கு உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்துள்ளதால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கோரிக்கை விடுத்துள்ளது. கட்சியின் திருநெல்வேலி மாவட்டச் செயலர் கே.ஜி. பாஸ்கரன் வெளியிட்ட அறிக்கை: வடகிழக்குப் பருவமழை அக். 28இல் தொடங்கி இதுவரை தொடர்ந்து பெய்து வருகிறது. கனமழைக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில் வட்டத்தில் சிறுகிழங்கு, உளுந்து, பூக்கும் பருவத்தில் கத்தரி போன்ற விளைபொருள்கள் சுமார் 500 ஏக்கரில் சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. மழையால் வாழை விலை கடும் வீழ்ச்சி அடைந்து விவசாயிகளுக்கு செலவுத் தொகைகூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 2014-15இல் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முறையான காப்பீடு கிடைக்காத நிலையில், தற்போது நிகழ் வடகிழக்குப் பருவத்தில் விவசாயிகளுக்கு மேலும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் முறையாக கணக்கீடு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணம் வழங்க வேண்டும். மேலும் குடிநீரில் கழிவுநீர் கலப்பதாகப் புகார் எழுந்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால் நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே, உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சுகாதாரப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தினகரன்

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.42 அடி**



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.42 அடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 3,103 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 2,844 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 1,200 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையில் நீர்வரத்தைவிட, திறப்பு குறைந்த அளவிலேயே உள்ளதால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 96.32 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 96.42 அடியாக அதிகரித்தது.

**நஞ்சை அழித்து நன்மை புகட்டும் சாம்பார் - ரசம்! ஏன்? எப்படி?**



நமது சமையல் முறையில் நாம் சேர்த்துக் கொள்ளும் ஒவ்வொரு பொருட்களுக்குப் பின்பும் ஓர் அழுத்தமான மருத்துவக் காரணம் உண்டு. சாம்பார், ரசம் என தினசரி நமது உணவுப் பயன்பாட்டில் தவிர்க்க முடியாததாக இருப்பது புளி. நமது உணவுப் பொருட்களில் உள்ள நச்சை வெளியேற்றக்கூடிய மகத்தான தன்மை புளிக்கு இருக்கிறது என சமீபத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஹைதராபாத்திலுள்ள நேஷனல் இன்ஸ்டி டியூட் ஆஃப் நியூட்ரிஷன் நடத்திய ஆய்வில் குடிநீர் மூலம் உடலில் தேங்கும் ஃப்ளோரோசிஸை புளியானது சிறுநீர் வழியே வெளியேற்றி விடுவது கண்டறியப்பட்டுள்ளது.இதை இன்றைக்கு அல்ல... பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்ததால்தான் நம் முன்னோர் புளியை உணவில் சேர்த்து வந்துள்ளனர். சித்த மருத்துவத்தில் புளி முக்கியமான மருத்துவப் பொருளாக இருக்கிறது என்கிறார் சித்த மருத்துவர் காசிப்பிச்சை ‘‘பழைய புளியை நெருப்பில் சுட்டு, உப்பை வறுத்து அதன் மூலம் சீரகம், மிளகு ஆகியவற்றைக் கொண்டு வைக்கும் ரசத்தை நோய் வாய்ப்பட்டவர்களுக்குக் கொடுப்பார்கள். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு செரிமான சக்தி குறைந்த அளவில்தான் இருக்கும் என்பதே காரணம். எந்த ஒரு உணவுப் பொருளையும் செரிமானம் செய்யும் தன்மை புளிக்கு இருக்கிறது. புளி என்பது Hormone stimulant - அதாவது, உடலில் உள்ள ஹார்மோன்களை தூண்டிவிட்டு வளர்சிதை மாற்றத்துக்கு காரணமாக இருக்கிறது. ‘ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும்’ என்றொரு பழமொழி சொல்வார்கள். அதன் உண்மையான அர்த்தம் வேறு. ஆ-நெய் என்றால் பசு நெய், பூ-நெய் என்றால் தேன். 40 வயதுக்குள் பசுநெய் சாப்பிட வேண்டும்... அதற்கு மேல் தேன் சாப்பிட வேண்டும். ஆகவேதான் ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூநெய்க்கு ஒரு காலம் வரும் என்றார்கள். பசுநெய் போலவே புளியையும் 40 வயதுக்குள் இளமைத் துடிப்போடு இருக்கும்

காலகட்டத்தில்தான் சாப்பிட வேண்டும்.

இள வயதினருக்கு புளி அவசியம் தேவை. சரியான அளவில் புளியை எடுத்துக் கொள்பவர்களுக்கு ஆண்மை வீறு கொண்டிருக்கும். சுட்ட பழைய புளி மற்றும் பூண்டை சேர்த்து அரைத்து சாப்பிட்டால் மூலக்கடுப்பு மற்றும் ரத்த மூலம் ஆகியவை குணமடையும். புளி என்பது டார்டாரிக் அமிலம். பொதுவாக அமிலங்களுக்கு நச்சுகளை அழிக்கும் தன்மை இருக்கும். விஷம் குடித்தவர்களுக்கு புளிக்கரைசல் கொடுப்பதைப் பார்த்திருப்போம்.

புளிக்கரைசல் குடலில் இருக்கும் விஷத்தை வயிற்றுப்போக்கு மூலம் வெளியேற்றி விடும். எலுமிச்சைப் பழத்தை தேய்த்துக் குளித்தாலும், புளியங்காயை அரைத்துத் தேய்த்துக் குளித்தாலும் சரும நோய்கள் வராது. இப்படியாக பல நன்மைகள் புளியில் இருந்தாலும், அதை அளவாகவும் முறையாகவும் பயன்படுத்தவில்லை என்றால் நேரெதிர் தீங்குகளுக்கு ஆளாக நேரிடும். புளி என்பது அமிலத்தன்மை உடையது என்பதால் ரத்தத்தில் உள்ள அமில காரத்தன்மையை சமநிலைப்படுத்த வேண்டி காரத்தன்மையுடைய தண்ணீர் நிறைய குடிக்க வேண்டி வரும். இதன் காரணமாகத்தான் புளியோதரை, பிரியாணி ஆகியவற்றை சாப்பிடும்போது தண்ணீர் நிறைய குடிக்கிறோம். அப்படி தண்ணீர் குடிக்காமல் விடும்போது உடலில் உள்ள நீர் உறிஞ்சப் பட்டு மலச்சிக்கல் ஏற்படும். இது நாளடைவில் மூலத்தை ஏற்படுத்தவும் கூடும். அதாவது, மூலநோய்க்கு மருந்தாக இருக்கும் புளியை முறையாக உட்கொள்ளாவிட்டால் அந்நோய்க்கு காரணமாகவும் மாறும். வாதம் பித்தம் கபம் என மனித உடலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். பித்த உடலில் அமிலநிலை அதிகம் இருப்பதால் சூடாக இருக்கும். அதனால் பித்த உடலைக் கொண்டவர்கள் புளியைத் தவிர்க்க வேண்டும்.

புளியமரம், நெல்லி, சீமைக்கருவேலம் போன்று இலைகள் சிறியதாக இருக்கும் மரங்கள் சூடானவை என்பதால்தான், அம்மரங்களில் பறவைகள் அண்டுவதில்லை. மா, பலா, வேப்பை மரங்கள் போன்று இலைகள் பெரியதாக இருக்கும் மரங்கள் குளிர்ச்சியானவை. புளியமரம் போன்ற சூடான மரங்கள் கார்பன் டை ஆக்சைடை அதிகம் வெளியேற்று கின்றன. புளியமரத்துக்கு அருகே செல்லும்போது இதன் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்படுவதைத்தான் பேய் அடித்ததாகக் கூறுகிறோம். புளி அதிகம் சேர்த்துக் கொள்பவர்கள், அதற்கேற்றாற் போல தண்ணீர் குடிக்கவில்லையென்றால் சிறுநீரகத்தில் கல்

ஏற்படக்கூடும். ஆகவே புளியை அளவோடும் சரியான முறையிலும் உட்கொண்டால் அதுவும் மூலிகையே!'' என்கிறார் காசிப்பிச்சை.

எடையை குறைத்து பருமனைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் புளிக்கு இருக்கிறது என்கிறார் உணவியல் நிபுணர் வினிதா கிருஷ்ணன். ''புளியில் இருக்கும் Garcinia cambogia என்கிற மூலப்பொருள் எடை குறைப்பதற்கு உதவியாக இருக்கிறது. அது நம் உடலில் தேங்கும் கலோரியை எரிக்கும் ஆற்றல் உடையது. கேரளாவில் பெரிதும் பயன்படுத்தப்படும் கொடம்புளியில் இந்த மூலப்பொருள் அதிகம் இருக்கிறது. புளியை ஊறவைத்த தண்ணீரைக் குடித்தாலும் எடை கட்டுக்குள் வரும். 100 கிராம் புளியில் 13 சதவிகிதம் Non starch polysaccharides (NSP) என்கிற நார்ச்சத்து இருக்கிறது. இதிலுள்ள Bile salt உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளை குறைக்கிறது. காப்பர், பொட்டாசியம், கால்சியம், இரும்பு, துத்தநாகம், மெக்னீசியம் போன்ற தாதுக்களும், வைட்டமின் ஏ, சி, தையமின், ஃபோலிக் அமிலம், ரிபோஃப்ளேவின், நியாசின் போன்ற வைட்டமின்களும் புளியில் இருக்கின்றன'' என்கிறார் வினிதா கிருஷ்ணன்.

**உடலுக்கு வலுசேர்த்து ஆரோக்கியம் காக்கும் பயறுகள்!**



உடலை வலுவாக்கும் உணவுகளில் பயறு வகைகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. புரதச்சத்து மிகுதியாக இருப்பதால், பயறு வகைகள் அசைவ உணவுக்கு இணையாகக் கருதப்படுகின்றன. பொதுவாகப் பயறு வகைகள் உலர்ந்து விதைகளாக மாறுவதற்கு முந்தைய நிலையிலும் சாப்பிட ஏற்றவை

தான். ஆனாலும், நன்றாக முதிர்ந்தப் பயறு வகைகளில்தான் குறைவான ஈரப்பதமும் அதிகச் சத்துக்களும் இருக்கும். முளைவிட்டப் பயறு வகைகளில் அதிக அளவு நீர்ச் சத்தும், வைட்டமின் சத்துக்களும் இருப்பதால் பூஞ்சைக் காளான் வளர ஆரம்பிக்கும் வாய்ப்பு உள்ளது. அதனால், பாதுகாப்பாக வைப்பது அவசியம். கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து மற்றும் வைட்டமின் - பி காம்ப்ளெக்ஸ், ரிபோஃபிளேவின் போன்ற சத்துக்கள் அதிகம் இருப்பதால், உடலுக்கு நல்ல ஊட்டத்தைக் கொடுக்கும். குழந்தைகள் முதல் டீன் ஏஜ் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வயதானவர்கள் என அனைவருக் கும் பயறு வகைகள் அவசியம் தேவை. அதே சமயம், அதிகமாகச் சாப்பிடுவது நல்லது அல்ல. சைவ உணவு சாப்பிடுபவர்கள், தினமும் ஏதேனும் ஒரு வகை பயறை 50 கிராம் எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பயறுகளைச் சுண்டலாக சமைத்துச் சாப்பிடுவது நல்லது!" என்கிறார் டயட் கவுன்சலர் கிருஷ்ணமூர்த்தி.

**எச்சரிக்கை:** ஜீரண சக்திக் குறைபாடு, வயிறு சம்பந்தப்பட்டப் பிரச்னை, சிறுநீரகப் பாதிப்புக் கொண்டவர்கள் சில பயறு வகைகளை குறைவான அளவில் சாப்பிடுவதே நல்லது. முளைக்கட்டியப் பயறு வகைகளில் 'யூரிக் ஆசிட்' அதிகம் இருப்பதால், மூட்டு வலி (Gout Disease) வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிலருக்கு வயிற்றுப்போக்கும் ஏற்படலாம். முளைக்கட்டியப் பயறை வெந் நீரில் மிதமாக வேகவைத்துச் சாப்பிட வேண்டும். இதில், நார்ச் சத்து அதிக அளவில் இருப்பதால், சாப்பிட்டதும் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

**பச்சைப் பயறு**

எலும்பு வளர்ச்சிக்கும், ரத்த ஓட்டத்துக்கும், வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகளின் தசைகளை வலுவாக்குவதற்கும் ஏற்றது பச்சைப் பயறு. மலச் சிக்கலைப் போக்கும். இதில், புரதம், கலோரி, பாஸ்பரஸ், ஃபோலிக் ஆசிட், பொட்டாஷியம், நார்ச் சத்து ஆகியவை அதிக அளவில் இருக்கின்றன. மாவுச் சத்து, கொழுப்பு, கோலின், பீட்டா கரோட்டின், கால்சியம், இரும்பு, மெக்னீஷியம், தாமிரம், சோடியம் ஆகியவை ஓரளவு இருக்கின்றன. இதய நோயாளிகள், சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாம். பொட்டாஷியம், பாஸ்பரஸ் அதிகமாக இருப்பதால், சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்கள் தவிர்க்க

வேண்டும்.

**கொண்டைக்கடலை**

ரத்த நாளங்களில் கொழுப்பு படிவதைத் தடுக்கும். வயிற்றில் வரும் புற்றுநோயான இன்டெஸ்டினல் கேன்சர் (Intestinal cancer) போன்ற நோய்களைத் தடுக்க வல்லது. இதில் புரதம், மாவுச் சத்து, கலோரி, ஃபோலிக் ஆசிட், நார்ச் சத்து மற்றும் தாது உப்புக்களான கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, மெக்னீஷியம், சோடியம், பொட்டாஷியம், தாமிரம், துத்தநாகம் ஆகியவை அதிக அளவில் இருக்கின்றன. கொழுப்பு ஓரளவும் கோலின், பீட்டா கரோட்டின் ஆகியவை சிறிதளவும் இருக்கின்றன. வெள்ளை நிறக் கொண்டைக் கடலையைக் காட்டிலும் சிறிய அளவிலானக் கறுப்பு நிறக் கொண்டைக் கடலையில் அதிக அளவு நார்ச் சத்து இருக்கிறது. முளைக்கட்டிய கொண்டைக் கடலையில் இருக்கும் ஹார்மோன் உடலில் உள்ள கொழுப்பைக் குறைக்கும். சர்க்கரை நோயாளிகள், இதய நோயாளிகள் சாப்பிடலாம். சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள், கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

**மொச்சைப் பயறு**

சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும்; மலச்சிக்கலைப் போக்கும்; இதில், புரதம், மாவுச் சத்து, கோலின், பாஸ்பரஸ் ஆகியவை மிக அதிகமாக இருக்கின்றன. இரும்பு, கால்சியம், சோடியம், பொட்டாசியம், வைட்டமின் - பி காம்ப்ளெக்ஸ், நார்ச் சத்து ஆகியவை ஓரளவு இருக்கின்றன. சிலருக்கு மொச்சை சாப்பிட்டால், வாயுப் பிரச்னை ஏற்படும். அவர்கள் தவிர்ப்பது நல்லது. சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் மிகக் குறைந்த அளவே எடுத்துக்கொள்ள வேண்டும். கர்ப்பிணிகள், இதய நோயாளிகள், சர்க்கரை நோயாளிகள், வளரும் குழந்தைகள் ஆகியோர் தினமும் சாப்பிடலாம்.

**காராமணி**

உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றக் கூடிய தன்மை இதற்கு உண்டு. வயிற்றில் புற்றுநோய் வராமல் தடுக்கும். தென் மாவட்ட மக்கள் இதைத் தட்டைப் பயறு என்று அழைப்பார்கள். இதில் பொட்டாசியம் மிகவும் அதிகமாக இருக்கிறது. புரதம், கலோரி, மாவுச் சத்து, பாஸ்பரஸ், இரும்பு,

மெக்னீஷியம், ஃபோலிக் ஆசிட், கோலின் ஆகியவை அதிகமாக இருக்கின்றன. தாமிரம், மெக்னீஷியம், துத்தநாகம் ஆகியவை ஓரளவு இருக்கின்றன. வைட்டமின் - பி காம்ப்ளெக்ஸ், பீட்டா கரோட்டின் ஆகியவை குறைந்த அளவில் இருக்கின்றன. வாயுப் பிரச்னை இருப்பவர்கள் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரும் குழந்தைகளுக்கு ஏற்ற உணவு.

**கொள்ளு**

எலும்புக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும்; தசைகள் வலுப் பெறும். உடலில் உள்ள கொழுப்பை அகற்றி, உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும். இதில், புரதம், கலோரி, மாவுச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, மெக்னீஷியம், பொட்டாஷியம் மற்றும் நார்ச்சத்து அதிகமாக இருக்கின்றன. ஆக்ஸாலிக் ஆசிட் இருப்பதால், அதிகம் சாப்பிடக் கூடாது. அவ்வப்போது, கொள்ளு ரசம் வைத்துச் சாப்பிடலாம். சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் சாப்பிட வேண்டாம். மற்றபடி எல்லோருக்கும் ஏற்றது. புரதச் சத்து அதிகம் இருப்பதால் அளவோடு எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ராஜ்மா**

தசைகளை நன்றாக இறுகச்செய்வதோடு, மலச் சிக்கலையும் தடுக்கும் ஆற்றல் கொண்டது. இதில் புரதம், கலோரி, மாவுச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு ஆகிய சத்துக்கள் உண்டு. மெக்னீஷியம், துத்தநாகம், தாமிரம், நார்ச் சத்து ஓரளவு இருக்கின்றன. சோடியம், பொட்டாஷியம் ஆகியவை மிகக் குறைந்த அளவே இருக்கின்றன. சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் தவிர்ப்பது நல்லது. உடலை வருத்தி உடற்பயிற்சி செய்பவர்கள், கர்ப்பிணிகள், சர்க்கரை மற்றும் இதய நோயாளிகள் அனைவரும் சாப்பிட ஏற்றது.

**பட்டாணி**

காய்ந்த பட்டாணியில் புரதம், மாவுச் சத்து, கலோரி மற்றும் தாது உப்புக்களான இரும்பு, பாஸ்பரஸ், மெக்னீஷியம், சோடியம், பொட்டாஷியம், தாமிரம், துத்தநாகம், கோலின் ஆகியவை அதிகமாக இருக்கின்றன. நார்ச் சத்து ஓரளவு இருக்கிறது. பீட்டா கரோட்டின், வைட்டமின் - பி காம்ப்ளெக்ஸ், ஃபோலிக்

ஆசிட் ஆகியவை குறைந்த அளவே இருக்கின்றன. பொட்டாஷியம் அதிகமாக இருப்பதால் சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் தவிர்க்க வேண்டும். பச்சைப் பட்டாணித் தோலில் கால்சியம், இரும்புச் சத்து அதிகமாக உள்ளன. புரதம், மாவுச் சத்து, கலோரி, வைட்டமின் - சி ஆகியவை மிகவும் குறைவாகவே இருக்கின்றன. வாயுப் பிரச்னை இருப்பவர்களும், ஜீரண சக்தி குறைவாக இருப்பவர்களும் இதனைத் தவிர்ப்பது நல்லது. சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் சாப்பிடலாம். குறைந்த அளவில் சாப்பிடுவதே நல்லது.

**சோயா**

கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கும்; பெண்களுக்கு ஹார்மோன் பிரச்னைகளைப் போக்கும்; வளரும் குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. புற்றுநோயைத் தடுக்கவல்லது; இதில், புரதம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு ஃபோலிக் ஆசிட், ஒமேகா 3 வகை கொழுப்பு ஆகியவை அதிகமாக இருக்கின்றன. மாவுச் சத்து, தைமின், ரிபோஃபோமின், பீட்டா கரோட்டின், மெக்னீஷியம், தாமிரம், துத்தநாகம் ஆகியவை ஓரளவு இருக்கின்றன. பால் குடிக்காதவர்களுக்கு சோயா பால் கொடுக்கலாம். சோயா சிலருக்கு ஜீரணப் பிரச்னையை ஏற்படுத்துவதால், நன்றாகச் சமைத்துச் சாப்பிடுவதே நல்லது. வளரும் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகளுக்கு ஏற்றது. நாள் ஒன்றுக்கு 20 கிராம் மட்டுமே சாப்பிட வேண்டும்.

**துவரை**

உடலுக்கு நல்ல சக்தியைக் கொடுக்கும், மலச் சிக்கல் பிரச்னை வராமல் தடுக்கக்கூடியது. இதில், மெக்னீஷியம், சோடியம், பொட்டாசியம், தாமிரம், துத்தநாகம் ஆகியவை அதிகமாக இருக்கின்றன. நார்ச் சத்து, கால்சியம் பாஸ்பரஸ், பீட்டா கரோட்டின், வைட்டமின் - பி காம்ப்ளெக்ஸ், வைட்டமின் - சி, நார்ச் சத்து ஆகியவை ஓரளவு இருக்கின்றன. புரதம், மாவுச் சத்து, கலோரி, இரும்பு, கோலின், ஆக்சாலிக் ஆசிட் ஆகியவை குறைந்த அளவில் இருக்கின்றன. அதிகம் வேக வைக்கவேண்டியது இல்லை. இதய நோயாளிகள், சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் குறைந்த அளவு சேர்த்துக் கொள்ளலாம்.

**பசியை தூண்டும் வெற்றிலை**




வெற்றிலை உடலுக்கு ஆரோக்கியம் தரக்கூடியது. காரமும், மணமும் கொண்ட இதற்கு மெல்லிலை என்ற பெயர் உண்டு. வெற்றிலை வயிற்றில் இருக்கும் வாயுவை வெளியேற்றும். சளியை கரைக்க கூடிய தன்மை கொண்டது. வலி, வீக்கத்தை போக்கும். உடலுக்கு உஷ்ணத்தை கொடுக்கும். பால் பெருக்கியாக பயன்படுகிறது. உமிழ்நீரை சுரக்க வைக்க கூடியதாக வெற்றிலை இருக்கிறது. செரிமான கோளறுகளை போக்கும். உள் உறுப்புகளை சீராக செயல்படுத்துகிறது. இருமல், சளியை போக்க கூடியது.

வெற்றிலையை பயன்படுத்தி செரியாமை, நெஞ்சக கோளாறுக்கான மருந்து தயாரிக்கலாம். 2 வெற்றிலையை துண்டுகளாக்கி, அதனுடன் சிறிது இஞ்சி, பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிக்கட்டி குடித்தால் பசியின்மை சரியாகும். வயிற்று கோளாறுகள் குணமாகும். வெற்றிலை பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. வெற்றிலையுடன் பாக்கு போடும்போது, பாக்கில் இருக்கும் பூச்சிகள் நம்மை தாக்காத வண்ணம் தடுக்கிறது. வெற்றிலை பசியை தூண்டக் கூடியது. வெற்றிலையை இரவில் சாப்பிடுவதால் சீரண கோளாறுகள் சரியாகிறது. உடலுக்கு பலம் தரக்கூடிய வெற்றிலை, உள்ளத்துக்கு இதமான சூழலை உருவாக்குகிற்து. வெற்றிலையை பயன்படுத்தி குழந்தைகளுக்கு சளி பிடிக்காமல் பாதுகாக்கும் மருந்து தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: வெற்றிலை, துளசி, ஏலக்காய், லவங்கம், தேன். ஒரு வேளைக்கான தேனீர் தயாரிக்க ஒரு வெற்றிலை எடுத்துக் கொள்ளவும்.

இதனுடன், ஒரு லவங்கம் மற்றும் ஒரு ஏலக்காய் ஆகியவற்றை இடித்து சேர்க்கவும். மேலும், 5 துளசி இலைகளை சேர்த்து, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். பின்னர், வடிக்கட்டி தேன் சேர்க்கவும். இதை குழந்தைகளுக்கு கொடுப்பதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. வயிற்று வலி சரியாகும். விட்டுவிட்டு வரும் காய்ச்சலை போக்கும். குழந்தைகளுக்கு அஜீரண கோளாறு ஏற்படாது. நல்ல பசியை தூண்டும். சளி, காய்ச்சல் தொல்லை இருக்காது. வெற்றிலையை பயன்படுத்தி குழந்தைகளுக்கு ஏற்படும் நெஞ்சக சளி, தலைவலி, பெண்களுக்கு ஏற்படும் பால்கட்டு பிரச்னைக்கான மேல்பத்து தயாரிக்கலாம்.ஒரு தட்டில் சிறிது நல்லெண்ணெயை தடவவும், இதில் வெற்றிலையை அடுக்கி வைக்கவும். வெற்றிலையை வாட்டிய பின் வலி, வீக்கம் இருக்கும் இடத்தில் வைத்தால் சரியாகும். தலைவலிக்கு ஒத்தடமும் கொடுக்கலாம்.

மிதமான சூட்டில் எடுத்து குழந்தைகளுக்கு மார்பு மேல் பத்தாக வைத்தால் சளி கரையும். பெண்களுக்கு பால்கட்டுவதால் ஏற்படும் வலியை குணப்படுத்தும். வெற்றிலை காயங்களை ஆற்றும் தன்மை கொண்டது. வலியை தணிக்க கூடியது. வீக்கத்தை கரைக்கவல்லது. எச்சிலை சுரக்க வைக்கும் தன்மை உடையது. வெற்றிலை சாறு ஓரிரு துளிகள் எடுத்து மூக்கில் உறிஞ்சும்போது தலைபாரம், சளி கரையும். காதில் விடுவதால் காதுவலி காணாமல் போகிறது.

**வேளாண் விரிவாக்க திட்டத்தில் 8 வட்டாரங்களில் ஆய்வு பணி நிறைவு**

கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட வேளாண் விரிவாக்க திட்ட அட்டவணைப்படி 8 வட்டாரங்களில் ஆய்வு பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.தமிழகத்தில் விவசாயிகளின் குறைகளை கண்டறிய வேளாண்மை அலுவலர்கள் நேரடியாக அவர்களின் இருப்பிடத்திற்கு சென்று தகவல்களை பெற ஒருங்கிணைந்த விவசாயிகள் வேளாண் விரிவாக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவையில் கடந்த ஜனவரி மாதம் துவங்கப்பட்ட இத்திட்டம் கைவிடப்பட்டது.

இதனை தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று கடந்த மே மாதம் இத்திட்டம் அட்டவணை முறைப்படி மீண்டும் துவங்கப்பட்டது. இதுகுறித்து வேளாண்மை துறை அதிகாரிகள் கூறுகையில், தமிழகம் முழுவதும் உள்ள 385

வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதில் 379 வட்டாரங்களை வேளாண்மைத்துறையினரும், 6 வட்டாரங்களை தோட்டக்கலைத்துறையினரும் செயல்படுத்தி வருகின்றனர். கோவையில் 163 கிராமங்கள், பொள்ளாச்சியில் 132 கிராமங்கள் என மொத்தம் 295 கிராமங்களுக்கு அலுவலர்கள் சென்று விவசாயிகளின் குறைகளை கேட்க வேண்டும். இதற்காக ஒரு வட்டாரத்திற்கு 6 அலுவலர்கள் என 12 வட்டாரத்திற்கு 70 அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வட்டாரத்தில் உள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துைற அலுவலர்களுக்கும் அவர்களுடைய வட்டாரத்தில் ஒவ்வொரு வாரமும் எத்தனை கிராமங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்ற அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் படி அலுவலர்கள் அக்கிராமங்களுக்கு சென்று விவசாயிகளின் குறைகளை அறிந்து வருகின்றனர். தற்போது வரை 8 வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் விவசாயிகளை நேரடியாக சந்தித்து அவர்களின் பிரச்னைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கை இம்மாத இறுதியில் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது எனத் தெரிவித்தனர்.

**பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

கொள்ளிடம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அப்பன்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: சமீபத்தில் தொடர் மழை பெய்துள்ளது. இதனால் சம்பா நடவு மற்றும் நேரடி விதைப்பு பயிர் தண்ணீரில் மூழ்கி சேதமடைவதற்கு வாய்ப்புள்ளது. இயற்கை இடர்பாடுகளினால் பயிர் கிடப்பு மற்றும் அதன் விளைவுகளிலிருந்து காத்து கொள்ள வேளாண்மை கூட்டுறவு வங்களில் பயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள் வரும் 31ம் தேதிக்குள் பயிர்காப்பீடு செய்து கொள்ள வேண்டும். இந்த அரிய வாயப்பை பயன்படுத்தி அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீடு செய்து பயன்பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரசு தோட்டக்கலை பண்ணையில் குழித்தட்டு நாற்று விற்பனை**

பெரியகுளம் அருகே, அரசு தோட்டக்கலை பண்ணையில் குழித்தட்டு நாற்றுகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன என தோட்டக்கலை துணை இயக்குனர் சின்னராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், திண்டுக்கல்-குமுளி தேசிய நெடுஞ்சாலையில், எண்டப்புளி புதுப்பட்டி

கிராமத்தில் உள்ளது அரசு தோட்டக்கலை பண்ணை. இங்கு தோட்டக்கலை பயிர்களான கொய்யா, மாதுளை போன்ற கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன.

குழித்தட்டு முறையில் வீரிய ரக தக்காளி மற்றும் மிளகாய் நாற்றுகளும் தயார் நிலையில் உள்ளன. பண்ணையில் கொய் யா பதியன் நாற்று ரூ.25, மாதுளை பதியன் நாற்று ரூ.15, மா நெருக்குஒட்டு ரூ.50, மா மென்தண்டுஒட்டு ரூ.36, நாவல் ஒட்டு ரூ.25, பெருநெல்லி ரூ.25, பலா ஒட்டு ரூ.30, கருவேப்பிலை நாற்று ரூ.10, எலுமிச்சை நாற்று ரூ.8, பப்பாளி ரூ.5, வீரிய ரக பப்பாளி ரூ.18, இலவம் ரூ.5, தேக்கு ரூ.8, சவுக்கு ரூ.2, மல்லிகை நாற்று ரூ.8, வேம்பு ரூ.5, செடிமுருங்கை ரூ.8, அழகுச் செடிகள் ரூ.5 முதல் ரூ.15, தென்னை நெட்டை ரூ.25, குழித்தட்டு முறையில் வீரியரக தக்காளி, மிளகாய் நாற்றுகள் தட்டுடன் ஒரு நாற்று ரூ.1.50 ஆகியவை தயார் நிலையில் உள்ளன. எனவே, விவசாயிகள் தங்களுக்கு தேவையான நாற்றுகளை நேரடியாக பண்ணையில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவசாயிகள் தங்களது சந்தேகங்களுக்கு தோட்டக்கலை பண்ணை மேலாளர் நாகராஜனை 9940967604 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வேளாண் மாணவிகள் செயல் விளக்கம்**

உத்தமபாளையம் அருகே உ.அம்மாபட்டியில் தோட்டங்களில் பரவி பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளை விரட்டுவதற்கு இயற்கையாக விளையக்கூடிய எருக்கு, துத்தி, வேம்பு, நொச்சி, ஆமணக்கு உள்ளிட்ட செடிகளில் இருந்து பூச்சிகளை விரட்டக்கூடிய இயற்கை மருந்துகளை தயாரிப்பது குறித்து மதுரை விவசாய கல்லூரி மாணவிகள் இந்து, நிஷா, நிவிதா, ருக்மணி, வைத்தீஸ்வரி, லட்சுமிமானசா, ரம்யாராஜகோபால், ஜனனி ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

**வேளாண் மாணவிகள் கண்காட்சி**

சின்னமனூர், : சின்னமனூர் அருகே குச்சனூர் திருமலை நாயக்கர் மகாலில் குள்ளப்புரம் வேளாண் தொழில் நுட்ப கல்லூரி நான்காமாண்டு மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் வேளாண் தொடர்பான கண்காட்சி நடந்தது. சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரோஜாம்மாள் துவக்கி வைத்தார்.

விவசாய சங்கத்தலைவர் கோட்டைசாமி முன்னிலை வகித்தார். விவசாய சங்கசெயலாளர் ஆதிநாராயணன் வரவேற்றார். மாணவிகள் விவசாயம் குறித்து அதிநவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறிந்து விவசாயத்தை பெருக்கவும் உயர்ந்த இலக்கை அடையவும் தயாரித்த மாதிரிகளை கண்காட்சியில் வைத்திருந்தனர். தொடர்ந்து புதிய தொழில் நுட்பம் குறித்து வேளாண்மை அலுவலர் சங்கர், வேளாண் தொழில் நுட்ப கல்லூரி முனைவர் அருணா, இணை இயக்குனர் மோகன், வேளாண் விரிவாக்கத்துறை ஆசிரியர் ஜெயலட்சுமி, உதவி பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் எடுத்துரைத்தனர். மாணவிகள் நடத்திய கண்காட்சிக்கு சின்னமனூர் வேளாண்மை துறையினர் செய்திருந்தனர். விவசாயிகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

**தேயிலை தோட்டங்களில் மகசூலை அதிகரிக்க கவாத்து பணி தீவிரம்**

நீலகிரி மாவட்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது தேயிலை விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் துவக்க காலத்தில் மண் அரிப்பை தவிர்க்க மலைச்சரிவுகளில் தேயிலை பயிர் நடவு செய்யப்பட்டது. தற்போது இம்மாவட்ட பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இத்தொழில் விளங்கி வருகிறது. இதனிடையே தேயிலை வாரியம், உபாசி வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவற்றின் பரிந்துரையின் பேரில் 3 முதல் 5 ஆண்டுகள் வரை உள்ள தேயிலை செடிகள் கவாத்து செய்ய வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் மட்டுமே இப்பணியை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக பரவலான மழை பெய்ததால் இதனை கருத்தில் கொண்டு குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களில் கவாத்து செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இதுபோல் கவாத்து செய்யும் தேயிலை செடிகளில் நோய் ஏற்பட்டு காய்ந்து வருவதை தடுக்க புளூகாப்பர் என்ற மருந்தை கவாத்து செய்யப்பட்ட இடங்களில் பூசுகின்றனர்.

இதனால் வெட்டுப்பட்ட காயம் மறைந்து விரைவில் தேயிலை செடிகளில் மகசூல் கிடைக்கும் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் இதுபோன்ற நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த காலத்தில் கவாத்து செய்வதன் மூலம் பசுந்தேயிலை மற்றும் தேயிலை தூளின் தரம் உயர்ந்து

காணப்படும் என்பதால் தேயிலை வாரியத்தின் சார்பிலும் மானியம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**பெரம்பலூர் பகுதிகளில் பொங்கல் பண்டிகைக்காக காத்திருக்கும் மஞ்சள் கொத்து**

பெரம்பலூர், : பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒருமாதமே பாக்கி. தோர ணத்திற்காக மஞ்சள் தயார் நிலையில் உள்ளது. தமிழர்களின் முக்கியப் பண்டிகையாகவும், உழவுத்தொழிலுக்கு மரியாதை செய்யக்கூடிய ஒரே பண்டிகையாகவும் இருப்பது பொங்கல் பண்டிகை. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இப்போதிருந்தே தமிழர்கள் தங்கள் வீட்டிலுள்ள பாத்திரங்களைக் கழுவி சுத்தப்படுத்தி, வீடுகளுக்கு வெள்ளையடிக்கும் பணிகளைத் தொடங்கியுள்ளனர். இதில் வெளியேற்றப்படும் கழிவுகளை போகிப் பண்டிகைக்கு தீயிட்டுக் கொழுத்துவர்.

அதன்பிறகு சூரியப்பொங்கல், வாசல்பொங்கல் எனப்படும் முதல்நாள் பண்டி கைக்காக வீடுகளை அலங்கரிப்பார்கள். திண்ணைகளில் செம்மண் கோலமிட்டு, வாசல்களில் வண்ணவண்ணக் கோலமிடும் தமிழர்கள் வீட்டுவாயில்களை தோரணங்க ளைக்கட்டி அலங்கரிப்பார்கள். அதேபோல், மாட்டுவண்டிகளையும் அலங்கரிப்பார்கள். இவற்றில் பிரதானமாக இடம்பெறுவது மஞ்சள் ஆகும். இதற்காக வயல்களில் இருந்து மஞ்சல் செடிகளை கிழங்கோடு பிடுங்கியெடுத்து வந்து வாயில்களில் கட்டிவைத்து அலங்கரிப்பர். தமிழர்கள் கிருமிநாசினியாகப் பயன்படுத்தும் மஞ்சள் புனிதமான, மங்களகரமானப் பொருளாகவும் கருதப்படுவதால் மஞ்சளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவது வழக்கம். பெரம்பலூர் மாவட்டத்தில் உழைப்புக்கு ஏற்றபடி போதுமான விலைகிடைக்காதது, ஈரோட்டுக்கு கொண்டுசென்று சந்தையில் விற்பனை செய்ய மலைப்பது போன்ற காரணங்களால் தவிக்கும் மஞ்சள்வியாபாரிகள், பொங்கல் பண்டிகையைக் குறிவைத் துக் காத்திருக்கின்றனர். இதற்காக மஞ்சள் செடிகளைக் கிழங்கோடு பிடுங்கிவந்து கொத்துக் கொத்தாக ஜோடி ரூ.25முதல், அதிகப்பட்சம் ரூ.60வரைக்கும் விலைவைத்து விற்பனை செய்வர்.

இதனால் உற்பத்தி செலவாவது கையைக் கடிக்காமல் வியாபாரிகளால் பெறமுடியும்.எனவே பொங்கல் பண்டிகைக்கு அறுவடைசெய்ய பெரம்பலூர் மாவட்டத்தில் தயார் நிலையில் மஞ்சள்பயிர் காத்திருக்கிறது. இன்னும் சரியாக

30நாட்களே பாக்கி யுள்ள நிலையில் தளதளவென மஞ்சள்பயிர் வளர்ந்துள்ளது வியாபாரிகள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**பல ஆண்டுகளுக்கு பின் பாபநாசம், சேர்வலாறு அணைகளில் தினமும் 1248 மெகாவாட் முழு மின்சார உற்பத்தி**



விக்கிரமசிங்கபுரம்,

பாபநாசம், சேர்வலாறு அணைகளில் உள்ள மின்உற்பத்தி நிலையங்களில் பல ஆண்டுகளுக்குப் பின் தினமும் ஆயிரத்து 248 மெகாவாட் மின்சார உற்பத்தி நடைபெற்று வருகிறது.மின்உற்பத்தி நிலையங்கள் நெல்லை மாவட்டம் பாபநாசம் அணையிலும், சேர்வலாறு அணையிலும் மின்சார உற்பத்தி நிலையங்கள் உள்ளன. ஆண்டுதோறும் இந்த நிலையங்களில் மின்உற்பத்தி நடைபெறுவது வழக்கம். இதற்காக பாபநாசத்தில் ஒரு மணி நேரத்துக்கு தலா 8 மெகாவாட் மின்உற்பத்தி செய்யக்கூடிய வகையில் 4 டைனமோக்களும்,

சேர்வலாறு நிலையத்தில் ஒரு மணி நேரத்துக்கு 20 மெகாவாட் மின்உற்பத்தி செய்யக்கூடிய பெரிய டைனமோ ஒன்றும் அமைக்கப்பட்டு உள்ளன. இதில், பாபநாசத்தில் உள்ள ஒரு டைனமோவில் மின்உற்பத்தி செய்ய குறைந்தது 400 கனஅடி தண்ணீர் தேவை. இந்த வகையில் வினாடிக்கு ஆயிரத்து 600 கனஅடி தண்ணீர் அண்யில் திறக்கப்பட்டாலே, 4 டைனமோக்களிலும் மின்உற்பத்தி செய்ய முடியும். சேர்வலாறு அணையில் உள்ள 20 மெகாவாட் டைனமோவிற்கு வினாடிக்கு ஆயிரத்து 600 கனஅடி தண்ணீர் தேவை

மின்உற்பத்தி குறைவு மற்ற நாட்களில் குறைந்தளவு தண்ணீரைக் கொண்டு ஒன்றிரண்டு டைனமோக்களில் மட்டுமே மின்சார உற்பத்தி நடைபெறும். மழைக்காலங்களில் அணைகளில் கூடுதல் தண்ணீர் தேங்கி, தண்ணீர் திறப்பு அதிகரிக்கும் பட்சத்தில் சில நாட்களுக்கு மட்டுமே இந்த 2 மின்உற்பத்தி நிலையங்களிலும் முழு மின்சார உற்பத்தி நடைபெறும். கடந்த சில ஆண்டுகளாக மழைக்காலங்களில் அணைகளில் கூடுதல் தண்ணீர் தேங்கிய போதிலும் சில நாட்கள் மட்டுமே முழு மின்சார உற்பத்தி நடைபெற்று வந்தது. ஆனால், இந்த ஆண்டு பருவமழை தொடங்கியது முதல் அணைப் பகுதிகளில் கனமழை பெய்து வந்தது. நீர்பிடிப்பு பகுதிகளிலும் நல்ல மழை பெய்ததால், அணைகளுக்கு அதிக அளவில் தண்ணீர் வரத்து இருந்தது. பாபாநாசம், சேர்வலாறு அணைகளும் முன்கூட்டியே நிரம்பி வழிந்தன. முழு மின்சார உற்பத்தி இந்த இரு அணைகளிலும் கடந்த ஒரு மாதமாக அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட்டு, மின்சார உற்பத்தியும் முழு அளவில் நடந்தது. தினமும் ஒரு மணி நேரத்துக்கு சேர்வலாறு நிலையத்தில் 20 மெகாவாட் மின்சாரமும், பாபநாசம் நிலையத்தில் 32 மெகாவாட் மின்சாரமும், ஆக மொத்தமாக தினமும் ஆயிரத்து 248 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து அணைகள் நிரம்பி வழிவதால் அதிக மின்சார உற்பத்திக்கு வாய்ப்பு இருப்பதாக, மின்உற்பத்தி நிலைய வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. வெள்ளம் தணிந்தது நேற்று நெல்லை மாவட்ட அணைப்பகுதியில் மழை இல்லை. இருந்த போதிலும் நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து அணைகளுக்கு தண்ணீர் வரத்து உள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 2ஆயிரத்து 80 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரத்து 190 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது அணையின் நீர்மட்டம் 141.90 அடியாக இருந்தது. சேர்வலாறு அணையில் 143.63 அடி தண்ணீர் உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1600 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு 546 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 426 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 116.10 அடியாக இருந்தது. இதனால், தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் தணிந்து உள்ளது. கடனாநதி, ராமநதி மற்றும் காட்டாறு தண்ணீரையும் சேர்த்து தாமிரபரணியில் 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் ஓடுகிறது.

குடிநீர் வினியோகம் சீரானது

பாபநாசம், விக்கிரமசிங்கபுரம் பகுதியில் ஆற்றில் உள்ள உறைகிணறுகளில் வெள்ளம் வடிந்து விட்டதால், குடிநீர் திட்டங்கள் செயல்படத் தொடங்கி உள்ளன. இதனால், விக்கிரமசிங்கபுரம் நகரசபை, அடைய கருங்குளம், சிவந்தபுரம், கோடாரங்குளம் பஞ்சாயத்துகளில் நேற்று முன்தினம் முதல் குடிநீர் வழக்கம் போல் குழாய்களில் வினியோகிக்கப்பட்டது.

**குமரிக்கடல் அருகே மேலும் ஒரு மேலடுக்கு சுழற்சி; தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**



சென்னை,

குமரிக்கடல் அருகே மேலும் ஒரு மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளதால் தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பருவமழை வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் இறுதியில் தொடங்கியது. முதலில் விட்டு, விட்டு பெய்த மழை நவம்பர் மாதம் மற்றும் இம்மாதம் முதல் வாரத்திலும் வெளுத்து வாங்கியது. வரலாறு காணாத அளவுக்கு கனமழை கொட்டித் தீர்த்ததால் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகள் வெள்ளத்தில் மிதந்தன.

கடந்த சில நாட்களாக மழைக்கான அறிகுறிகள் எதுவும் இன்றி சென்னையில் வெயில் அடிக்கிறது. இந்தநிலையில் புதிதாக மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று (செவ்வாய்க்கிழமை) மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலடுக்கு சுழற்சி இதுகுறித்து சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:- குமரிக்கடல் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு உருவாகிய மேலடுக்கு சுழற்சி நகர்ந்து மாலத்தீவு அருகே நிலை கொண்டிருந்தது. இது தற்போது லட்சத்தீவு நோக்கி நகர்ந்துள்ளது. இந்தநிலையில் குமரிக்கடல் அருகே இலங்கையை ஒட்டியுள்ள பகுதியில் புதிதாக மேலும் ஒரு மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், வட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் அடுத்த 24 மணி நேரத்திற்குள் (இன்று) மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையை பொருத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக் கான சாத்தியக்கூறுகள் இல்லை. இவ்வாறு அவர் கூறினார். வால்பாறையில் 3 செ.மீ. மழை நேற்று காலை 8.30 மணியோடு நிறைவடைந்த 24 மணி நேர நிலவரப்படி தமிழகத்தில் பதிவாகிய மழை அளவு வருமாறு:- வால்பாறையில் அதிகபட்சமாக 3 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. தளவாடி, தேவாலா, சின்னக்கலார் பகுதிகளில் தலா ஒரு செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

## 3,200 ஹெக்டர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்க நடவடிக்கை மாணவ-மாணவிகளுக்கு விதை நேர்த்தி பயிற்சி



தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வனப்பகுதிகளில் 3,200 ஹெக்டர் நிலப்பரப்பில் சந்தன மரங்கள் வளர்க்க வனத்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதையொட்டி மாணவ-மாணவிகளுக்கு விதை நேர்த்தி பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாம் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள வனப்பகுதிகளில் சந்தன மரங்கள் வளர்ப்பை அதிகப்படுத்த வனத்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக சந்தன மரங்கள் வளர்ப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு சந்தனமர விதைநேர்த்தி முறைகள் குறித்த பயிற்சி முகாம் தர்மபுரி வனச்சரக அலுவலகத்தில் நேற்று நடந்தது. இந்த பயிற்சி முகாமை மண்டல வனப்பாதுகாவலர் உலகநாதன் தொடங்கி வைத்தார். மாவட்ட வனஅலுவலர் திருமால், உதவி வனஅலுவலர் வரதராஜன், வனச்சரகர்கள் ராஜலிங்கம், மாதையன், தங்கராஜ், மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி முகாமில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் சுற்றுச்சூழல் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் தலைமையில் தர்மபுரியில் உள்ள அரசு பள்ளி மாணவ-மாணவிகள் மற்றும் ஆசிரியைகள் பங்கேற்றனர். இந்த பயிற்சி முகாம் குறித்து மண்டல வனப்பாதுகாவலர் உலகநாதன் நிருபர்களிடம் கூறியதாவது:- கண்காணிப்பு பணி தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள வனப்பகுதிகளில் 3,200 ஹெக்டர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. தர்மபுரி வனக்கோட்டத்தில் தர்மபுரி, ஏலகிரி, வத்தல்மலை, பென்னாகரம், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் உள்ள வனப்பகுதிகளில் விதை நேர்த்திக்கு பின் சந்தனமர விதைகள் விதைக்கப்பட்டு வளர்க்கப்படும். நிலத்தின் தன்மையை பொறுத்து 15 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகளில் இந்த மரங்கள் பலனளிக்கும். தர்மபுரி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதை தடுக்க ஓசூர் வனப்பகுதியில் 18 குழுக்களும், தர்மபுரியில் 9 குழுக்களும், அரூரில் 5 குழுக்களும் அமைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மான், காட்டுப்பன்றி ஆகியவற்றை முதல்முறையாக வேட்டையாடுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அடுத்தடுத்து வேட்டையாடுபவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறை தண்டனை பெற்று தரப்படுகிறது. தர்மபுரி மாவட்ட வனப்பகுதிகளின் அடர்த்தி அதிகரித்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**சத்தியமங்கலம் தோட்டப்பகுதிகளில் பாம்பு-தவளைகளை கொல்லும் விஷ எறும்புகள்**




சத்தியமங்கலம்,

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சிக்கு உள்பட்ட பகுதி பெரியகுளம். விவசாயமே இங்கு முக்கிய தொழிலாக உள்ளது. எனவே இங்கு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் அதிகம் வசிக்கின்றனர். இங்குள்ள விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் கரும்பு, வாழை, சோளம், மக்காச்சோளம், குச்சிக்கிழங்கு ஆகிய பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். பெரியகுளம் பகுதியை சேர்ந்தவர் ஆறுமுகம். இவரது தோட்டம் அங்குள்ள ஒரு கோவில் அருகே உள்ளது. இந்த தோட்டத்தில் கரும்பு மற்றும் வாழை சாகுபடி செய்து உள்ளார். இந்தநிலையில் அவருடைய தோட்டத்தில் செம்மண் நிறத்தில் ஒரு வகையான எறும்பு ஊர்வதை கடந்த ஆண்டு அவர் பார்த்தார். சிற்றெறும்பு, கட்டெறும்பு போன்று இல்லாமல் நீண்ட கால்களுடன் இந்த எறும்பு சற்று விசித்திரமாக இருந்தது. இருந்தாலும் இதுவும் ஒரு வகை எறும்பு தானே என அவர் சாதாரணமாக நினைத்தார்.

<u>எரிச்சல்</u>

ஆனால் இந்த எறும்பு தற்போது அந்த பகுதியில் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட

விவசாய நிலங்களில் பல்லாயிரக்கணக்கில் பரவி உள்ளது. கடந்த ஒரு வருடத்தில் இந்த அளவுக்கு இனப்பெருக்கம் அடைந்து மிக வேகமாக பரவி உள்ளது விவசாயிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. அதுமட்டுமின்றி தோட்டத்தில் விவசாய வேலைகளுக்காக செல்லும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை இந்த எறும்புகள் கடித்து விட்டால் அவர்களுக்கு கடித்த இடத்தில் ஒருவித எரிச்சல் ஏற்படுவதுடன், கடித்த இடம் தடித்து வீக்கம் ஏற்பட்டு விடுகிறது. அந்த அளவுக்கு விஷத்தன்மை கொண்டதாக இந்த எறும்பு உள்ளது. பின்னர் சிறிது நேரத்தில் அந்த வீக்கம் தானாகவே குறைந்து விடுகிறது. அதுமட்டுமின்றி இந்த விஷ எறும்புகள் சுற்றித்திரியும் இடங்களில் பாம்பு, தவளைகள், எலிகள் வந்து விட்டால் அதன் கதி அதோ கதிதான்.

<u>பாம்பு-தவளைகளை கொன்றுவிடுகிறது</u>

அதாவது பாம்பு, தவளைகள், எலிகள் ஆகியவை உயிரோடு இருக்கும்போதே விஷ எறும்புகள் படையெடுத்து சென்று மொய்த்து அவைகளை கடித்தே கொன்று விடுகிறது. சிறிது நேரத்தில் பார்த்தால் பாம்பு, தவளை, எலிகளின் உருவம் அப்படியே இருக்கும். ஆனால் அதனுள் உயிரே இருக்காது. அதுமட்டுமின்றி இறந்த பாம்பு, தவளை மற்றும் எலிகளின் உடலில் இருந்து எந்தவித துர்நாற்றமும் வீசாது. இதுகுறித்து அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:-

செம்மண் நிறத்தில் இருக்கும் இந்த எறும்புகள் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக இங்குள்ள விவசாய நிலங்களில் பரவி உள்ளது. கரும்பு, வாழை, சோளம், மக்காச்சோளம், குச்சிக்கிழங்கு, சம்பங்கி. பூச்செடி ஆகியவற்றில் இந்த விஷ எறும்புகள் ஊர்ந்து செல்கிறது. காலை 10 மணி வரைதான் இந்த எறும்புகள் காணப் படுகிறது. பின்னர் அவைகள் நிலத்தின் உட்பகுதிக்குள் சென்று விடுகிறது. மாலை 4 மணி ஆனதும் இந்த விஷ எறும்புகள் மீண்டும் வெளியே வந்து விடுகிறது. <u>மொய்க்கும் விஷ எறும்புகள்</u> அதுமட்டுமின்றி தோட்டங்களில் வேலைக்கு வருபவர்களின் கால்களில் இந்த விஷ எறும்புகள் சர்ரென்று ஏறி கடித்து விடுவதால் அந்த இடத்தில் எரிச்சல் ஏற்படுவதுடன், வீங்குகிறது. இதனால் பலரும் இங்குள்ள தோட்டங்களில் வேலைக்கு வர அச்சப்படுகிறார்கள்.

மேலும் தோட்டங்களில் உள்ள மின் சுவிட்சுகள், 'பியூஸ்' கட்டைகள் ஆகியவற்றிலும் இந்த எறும்புகள் மொய்த்துக்கொண்டிருப்பதால் விவசாயிகளான நாங்கள் மின் மோட்டாரை இயக்க முடியாமல் அவதிப்பட்டு வருகிறோம். மின் சாதனங்களில் இருப்பதால் அந்த எறும்புகளை அகற்றுவதும் அவ்வளவு சுலபம் இல்லை. இதுகுறித்து வேளாண்துறை அதிகாரி களுக்கு

புகார் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு விவசாயிகள் கூறினார்கள். எறும்புகளை கொல்வது எப்படி? இதுகுறித்து பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி மைய பூச்சியியல் துறை துணை பேராசிரியர் ஷீலாவிடம் கேட்ட போது, அவர் கூறியதாவது:- எறும்புகளில் 1,500 வகைகள் உள்ளன. இதில் சத்தியமங்கலம் பகுதியில் பரவி உள்ள இந்த எறும்பு செவ்வெறும்பு வகையை சேர்ந்தது. எளிதில் கடிக்காது. ஆனால் அதனை மிதித்தாலோ அல்லது தொட்டாலோ அல்லது சீண்டினாலோ கண்டிப்பாக கடிக்கும். பொதுவாக இந்த வகை எறும்புகள் மண்ணின் மேல் பகுதியில் புற்று அமைத்து அதனுள் வாழும். மழைக்காலங்களில் இந்த எறும்பின் புற்றுகளை நாம் எளிதில் கண்டுபிடித்து விடமுடியும். எனவே இந்த எறும்புகளின் புற்றுகளை விவசாயிகள் கண்டுபிடித்து அதனுள் மாலத்தியான் (5 சதவீதம்) மருந்து பவுடர் கரைசலை தெளித்தால் அந்த எறும்புகள் அழிந்து விடும். இதுகுறித்து அந்த பகுதி விவசாயிகளுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு துணை பேராசிரியர் ஷீலா கூறினார்.

**மீன்கள் வரத்து குறைவு விலை உயர்வால் மீனவர்கள் மகிழ்ச்சி**

வேதாரண்யம் கடற்பகுதியில் மீன்கள் வரத்து குறைவால் விலை உயர்ந்துள்ளது. இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மீன்பிடி காலம் நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா கோடியக்கரையில் அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை மீன்பிடி சீசன் காலமாகும். இந்த 6 மாதங்களில் தூத்துக்குடி, ராமேஸ்வரம், கடலூர், தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மீனவர்கள் இங்கு வந்து தங்கி மீன் பிடிப்பது வழக்கம். இந்த ஆண்டு சுமார் 500-க்கும் மேற்பட்ட பைபர் படகுகள், விசைப்படகுகள், மூலம் இப்பகுதியில் மீனவர்கள் மீன்பிடித்து வருகிறார்கள். நாள்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்று 50-க்கும் மேற்பட்ட மீன் வகைகளை பிடித்து வருகின்றனர். விலை உயர்வு தற்போது கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த தொடர்மழை காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் இருந்தனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு நேற்று மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்று திரும்பினர். இந்த மீனவர்கள் வலையில் காலா, வாவல், திருக்கை, சடையன், விலாங்குமீன், நீலக்கால் நண்டு, புள்ளி நண்டு, இறால், சிங்கி இறால் ஆகியவை குறைந்த அளவில் சிக்கின.

மீன்கள் குறைவாக கிடைப்பதால் மீன்களின் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ காலா மீன் ரூ.320, வாவல் மீன் ரூ.600, திருக்கை மீன் 100, நீலக்கால் நண்டு ரூ.300ம், புள்ளி நண்டு ரூ.180, சிறிய வகை இறால் ரூ.300, பெரிய வகை இறால் ரூ.700, மத்தி சிங்கி இறால் ரூ500, சிங்கி இறால் ஒருகிலோ ரூ.3000 என விற்கப்படுகிறது. மீன் விலை உயர்ந்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



**அரவைக்காக 1,000 டன் நெல் சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**



தஞ்சையில் இருந்து விழுப்புரத்திற்கு சரக்குரெயிலில் அரவைக்காக 1,000 டன் நெல் அனுப்பி வைக்கப்பட்டது. நெல் அரவை தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டு குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டது. இப்படி அறுவடை செய்யப்பட்ட நெல், விவசாயிகளிடம் இருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் பெறப்பட்டு பிள்ளையார்பட்டி, புனல்குளம், வீரமரசன்பேட்டை, பருத்தியப்பர்கோவில், அம்மன்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங் களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம். அதன்படி சேமிப்பு கிடங்குகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரிகளில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று காலை கொண்டு வரப்பட்டன. பின்னர் லாரிகளில் இருந்த நெல்மூட்டைகளை தொழிலாளர்கள் சரக்குரெயிலில் ஏற்றினர். மொத்தம் 21 வேகன்களில் 1,000 டன் நெல் ஏற்றப்பட்டது. பின்பு நெல் மூட்டைகளுடன் சரக்கு ரெயில் விழுப்புரத்திற்கு புறப்பட்டு சென்றது.

விகடன்

**'எல்நினோ'வால் தென் இந்தியாவில் அதிக மழைக்கு வாய்ப்பு: ஐ.நா. எச்சரிக்கை**

எல்நினோ' தாக்கத்தின் காரணமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை தென் இந்தியா வழக்கத்தை விட அதிக மழை வெள்ளத்தை காணும் என்று ஐ.நா. ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு ஒருமுறை பசிபிக் கடல் மட்டத்தின் வெப்ப நிலை அதிகரிக்கிறது. இதனால் உலக அளவில் பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. பசிபிக் கடல் நீர் மட்டத்தின் வெப்பம் அதிகரிப்பதை 'எல் நினோ' என்கிறார்கள். எல்நினோவின் தாக்கம் கடந்த 1998-ம் ஆண்டு கடுமையாக இருந்தது. அதை விட இந்த ஆண்டு அதாவது 2015-2016-ம் ஆண்டு இதன் தாக்கம் மிகப்பெரிய அளவில் இருக்கும் என்று ஐ.நா. ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.




இது தொடர்பாக ஐ.நா.வின் ஆசிய பொருளாதார மற்றும் சமூக அமைப்பு, பசிபிக் மற்றும் மண்டல ஒருங்கிணைந்த முன்னெச்சரிக்கை மையம் ஆகியவை கூட்டாக வெளியிட்டு உள்ள 3வது அறிவுறுத்தல் குறிப்பில், "2015-16-ம் ஆண்டு எல்நினோவின் தாக்கம் கம்போடியா, மத்திய மற்றும் தென் இந்தியா, கிழக்கு இந்தோனேஷியா, மத்திய மற்றும் தெற்கு பிலிப்பைன்ஸ், மத்திய மற்றும் வடகிழக்கு தாய்லாந்து ஆகிய நாடுகளில் மிகப்பெரிய அளவில் இருக்கும். குறிப்பாக தென் இந்தியாவின் பல பகுதிகளில் வழக்கத்தை விட அதிகமான மழை இருக்கும். இதனால் இன்னும் வெள்ளப்பெருக்கு ஏற்படும். தென்கிழக்கு ஆசிய நாடுகள், குறிப்பாக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் பலத்த மழை காரணமாக கடுமையான வெள்ளத்தை எதிர்கொள்ளவேண்டி இருக்கும். இதேபோல் சில பசிபிக் நாடுகளான பபுவா நியூகினியா, திமோர்-லெஸ்தே, வனாட்டு ஆகியவை கடுமையான வறட்சியை சந்திக்க நேரிடும். 1997-1998-ம் ஆண்டு ஏற்பட்ட எல் நினோவின் தாக்கத்தைவிட 2015-2016-ம் ஆண்டு ஏற்படும் எல்நினோ மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். இலங்கை மற்றும் இந்தியாவின் தென்பகுதியில் வழக்கத்தை விட மழை கூடுதலாக பெய்யும். இதனால் மேலும் வெள்ளம் ஏற்படும் நிலை உருவாகும். குறிப்பாக நகர்ப்புறங்களில் வெள்ளம் அதிகமாக காணப்படும். கடந்த நவம்பர் மாதம் பெய்த கன மழையால்தான் பெருமளவில் உயிர்ச்சேதமும் ஏற்பட்டது. சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்துக்கு 2015-2016 எல்நினோவின் தாக்கம்தான் காரணம் என்பதை நேரடியாக தொடர்புபடுத்தி கூறுவதற்கு விஞ்ஞான

ரீதியான விரிவான புலனாய்வுகள் எதுவும் இல்லை. அதேநேரம் தெற்கு ஆசியாவில் வழக்கத்தை விட வடகிழக்கு பருவமழை காலத்தில் அதிக மழை பெய்ததற்கு, இந்தியாவில் நிலவிய அதிகபட்ச தட்பவெப்ப நிலைதான் காரணம் என்பதையும், இதில் எல்நினோ குறிப்பிட்ட பங்கு வகித்ததையும் சுட்டிக் காட்ட முடியும்" என்று கூறப்பட்டுள்ளது.

**கல்லூரியில் பசுமை பாரம்பரிய உணவு விற்பனை!**

'அன்னம் எப்படியோ, எண்ணம் அப்படியே! உணவின் தூய்மை உணர்ந்து, வாழ்வை எளிமையாக்கும் உன்னதப் பாதை, சிறுதானிய உணவு முறையில் பொதிந்துள்ளது"
– நம்மாழ்வார்.

நாம் உண்ணும் உணவு குறித்த அக்கறையும் மரபு வழி அறிவும் மிக உயர்ந்தது. நம் மரபு முறை உணவுகள், வெறும் பசியை போக்குவதாக மட்டுமல்லாமல், நமக்கு ஆற்றல் தருபவையாகவும் அரு மருந்தாகவும் பயன்படுகின்றன.
ஏழைகளின் உணவாக இருந்த தினை, கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, வரகு, குதிரைவாலி போன்றவை, இன்று வசதியானவர்களின் உணவாக, வியாதியஸ்தர்கள் உண்ணும் உணவாக மாறிவருகின்றன. நாளுக்கு நாள் அவற்றின் விலையும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.
தேவை அதிகமாகவும் உற்பத்தி குறைவாகவும் இருப்பதால்தான் இந்த நிலை. விவசாயிகள், பணப் பயிரை விவசாயம் செய்வதால், நமது பாரம்பரிய உணவுகள் அழிந்துவருகின்றன. ஆதித் தமிழர்களின் ஆரோக்கியமே, நமது சிறுதானிய உணவில்தான் அடங்கி இருந்தது. அறிவியல் வளர்ச்சியால் நவீன மயமாகி வரும் உலகில், நாம் தற்போது சாப்பிடும் உணவு வகைகள் குறித்தும், நம் முன்னோர்கள் சாப்பிட்ட பாரம்பரிய தானிய உணவு வகைகளை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், பாரம்பரிய உணவு முறைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாகவும் திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரியில் தமிழர்களின் பாரம்பரிய சிறுதானிய உணவுகள் மிக குறைந்த விலையில் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன.



திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி வளாகத்தில் 'நம்ம கடை' என்ற பெயரில் பாரம்பரிய உணவுகள் விற்பனையகம் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வுணவு விற்பனையகத்தின் இயக்குநராக சமூகவியல் துறைப் பேராசிரியர் அருட்தந்தை ஆன்ட்ருஸ் செயல்பட்டு வருகிறார். இயற்கை உணவு முறையில் ஆர்வம் கொண்டுள்ள தொன்போஸ்கோ மேல்நிலைப்பள்ளியின் பொருளாதாரத்துறை ஆசிரியர் ஜெகன், பாரம்பரிய உணவுகள் மற்றும் நொறுக்குத் தீனிகளை தயாரித்து கடையில் வைத்து விற்பனை செய்து வருகிறார். தமிழர் உணவு நீண்ட நெடிய மரபுடையது. இனக்குழுச் சமூகத்தில் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்கள் மெல்ல மெல்லத் தங்களது அடையாளத்தை இழக்கத் தொடங்கினர். குறிப்பாக, இயற்கை வாழ்வு, மொழி இழப்பு, இயந்திரப் பெருக்கம், உடலுழைப்பின்மையால் தமிழர்கள் இன்று மருந்தையே உணவாக உட்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர்.



உணவே மருந்தாக இருந்த காலகட்டம் ஒழிந்து போய், இன்று மருந்தையே உணவாக உட்கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது கேலிக்குரியதும் வேதனைக்குரியதுமாகும். பஜ்ஜி, போண்டா, வடை, பர்கர், பீட்சா, கேக், பன் போன்றவைகளை தின்று கொண்டிருக்கின்ற மாணவர்களை 'நம்ம கடை' மாற்றியிருக்கிறது. இன்றைய தூய நெஞ்சக் கல்லூரி மாணவர்கள் தினை, சாமை, வரகு, கேழ்வரகு, கம்பு, சோளம், கடலையில் செய்யப்பட்டுள்ள புட்டு, லட்டு, அதரசம், கடலை உருண்டை போன்ற நொறுக்குத் தீனிகளைத் தின்னத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

மேலும், சாமை, தினை, வரகரிசி போன்றவற்றை வீட்டுக்கு வாங்கிச் செல்லும் கல்லூரிப் பேராசிரியர்கள் தங்களது நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைத்திருப்பதாகப் பெருமிதம் அடைகின்றனர். 'நம்ம கடை' தகவல் பலகையில் அன்றைய நொறுக்குத் தீனிகளின் பட்டியல் ஒட்டப்பட்டிருக்கும். அதைப் பார்த்து மாணவர்கள் வாங்கத் தொடங்குகின்றனர். மலைத்தேன் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும். கல்லூரி மாணவர்கள் மெல்ல மெல்ல இயற்கை உணவுமுறைக்கு மாறினால் இயற்கை விவசாயம் குறித்த சிந்தனை மேலோங்கும். செயற்கை உரங்களினால் மலடு

தட்டிப்போன நிலங்கள் உயிர் பெறும். கல்வித் தளத்தில், நம்மாழ்வார் என்ற இயற்கை வேளாண் விஞ்ஞானியைக் கூட அறிந்து கொள்ளத் தயாராக இல்லாத மாணவ சமூகத்திற்கு, 'நம்ம கடை' தமது தகவல் பலகையின் வாயிலாக இயற்கை உணவு முறை குறித்த நன்மைகளை அறியச் செய்கிறது. இன்று 'நம்ம கடை' யில் காத்திருக்கும் கூட்டத்தைப் போல செயற்கை விதைகளால் உருவாக்கப்படும் உணவுகளுக்கு எதிராகக் கூட வேண்டும் என்பது அனைவரின் கனவு.

இந்திய மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் நம்ம கடை போன்ற பாரம்பரிய உணவு விற்பனையகம் தொடங்கப்பட வேண்டும். இனி வரும் தலைமுறையினராவது தங்களது உணவு, உடல் ஆரோக்கியம் குறித்துச் சிந்திக்கத் தொடங்கட்டும்.